
Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 04 (26.03.2004) வெள்ளிக்கிழமை இதழ்:177

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை
எக்ஸ்போ எயார்
வான் வெளியில்
உங்கள் நண்பன்...


காயமுற்ற பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன்

### தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட

## பல்கலைக்கழக மாணவர்கள் மீது ஈ.பி.டி.பியினர் நேற்று தாக்குதல்!

### இருவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப் பகுதி முருகன் ஆலயத்திற்கு அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக, தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது, ஈ.பி.டி.பியினர் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கொக்குவில் பகுதியில் தேர்தல் பிரசாரப் பணிகளில், பல்கலைக்கழக மாணவிகள் வீடு வீடாக ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை - அவ்விடத்திற்கு வந்த ஈ.பி.டி.பியின் மணிபல்லவராஜன் மற்றும் ஜெகன் ஆகிய இருவரும் இவர்களை நோக்கி தகாத வார்த்தைகளால் பேசியதுடன் புகைப்படமும் எடுத்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவுடன் இணைந்துள்ள போராளிகள் உடனடியாக விலகிக்கொள்ள வேண்டும்!

### புலிகளின் தலைமைப்பீடம் எச்சரிக்கை!

(கிளிநொச்சி)

**மட்டக்களப்பு - அம்பாறை மக்களை பிரதேசவாதத்தால் ஏமாற்றி உல்லாச வாழ்க்கையையும், சொகுசுகளையும் அனுபவிக்கத் திட்டமிடும் கருணாவால் அந்தப் பகுதி மக்கள் சுரண்டப்படுவதை எமது தேசியத் தலைமை அனுமதிக்கப்போவதில்லை.**

**எமது இனத்தைக் காப்பாற்றுவதற்காக துரோகி கருணாவை எம் மண்ணிலிருந்து களைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. கருணா மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதை எதிர்க்க முனையும் எவரும் தமிழ்த் தேசியத்தின் துரோகியாகவே கணிக்கப்படுவர் என -**

**மட்டு - அம்பாறை நெருக்கடி நிலை தொடர்பாக அங்குள்ள போராளிகள், பொறுப்பாளர்களுக்கு விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

**அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -**

அன்புக்குரிய மட்டு - அம்பாறை போராளிகளே, பொறுப்பாளர்களே!

நமது மண்ணின் பெருமைக்கும், மாவீரர்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கும் கருணாவின் நடவடிக்கைகள் தொடர்பாக, நீங்கள் உண்மைகளைப் புரிந்து கொண்டு சரியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது.

தமிழீழத்தின், மட்டு - அம்பாறை மாவட்டங்களின் தளபதியாக இருந்த கருணா, தான் புரிந்த குற்றங்களை மறைப்பதற்காக பிரதேச வேறுபாட்டையும், சகோதரச் சண்டையையும் ஒருங்கே ஏற்படுத்த முனைகின்றார்.

மட்டக்களப்பு மக்களும், போராளிகளும் தேசியத் தலைவரை அணுகவிடாமலும் அவரோடு தொடர்பு கொள்ள விடாமலும் தடுத்து வைத்திருந்து, தன் குற்றங்களை மறைக்க முனைந்தார்.

அதையும் மீறி அவரின் பாலியல் குற்றங்களும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதேச மக்களுக்கு வாக்களிக்க வாய்ப்பு வேண்டும்

### ஜோசப் பரராஜசிங்கம் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச வாக்களிப்புகள் உரிய முறையில் இடம்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கண்காணிப்பாளர்களிடம் தெரிவித்ததாவது:

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 80 முதல் 84 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கின்றனர். இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளிலேயே வாக்களிக்க உள்ளனர்.

ஆனாலும், கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து இந்த மக்கள், வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டே வந்தனர். இந்த நிலையில் இந்த முறையும் அவ்வாறானதொரு நிலை ஏற்படுமோ என தான் அச்சமடைவதாக பரராஜசிங்கம் தெரிவித்தார்.

பரராஜசிங்கத்துடனான நேற்றைய சந்திப்பில் ஐரோப்பிய (12 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட

## பல்கலை மாணவர்களுடன் பொலிஸார் நேற்று மோதல்!

### திருநெல்வேலி சந்தியில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து, அப்பகுதியில் கூடியிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் பொலிஸார் தடியடிப் பிரயோகத்தையும், கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலையும் நடத்தி அவர்களைக் கலைத்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்று இரவு 7.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுக்காலை கொக்குவில் பகுதியில் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்ட மாணவர்களை, பொலிஸாருடன் சேர்ந்து ஈ.பி.டி.யினர் தாக்கியதில் இரண்டு மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், கூட்டமைப்பிற்கு ஆதரவாகவும், பல்கலைக்கழக மாணவர்கள் ஓட்டோ ஒன்றில் ஒலிபெருக்கி மூலம் யாழ். நகரப் பகுதி எங்கும் பிரசாரம் செய்தனர்.

இதன் பின்னர் மாலை ஆறு மணியளவில் திருநெல்வேலிச் (12 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் விதிமுறைகளை மீறியமைக்காக

## ஈ.பி.டி.பி, கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் சிலர் மற்றும் ஆதரவாளர்கள் தேர்தல் விதிமுறையினை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேட்பாளர்கள் இன்றி, கட்சிக்கொடி மற்றும் விருப்பு வாக்கு இலக்கம் என்பவற்றை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கும் வகையில் வாகனத்தில் நடமாடியதாகவே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு இடங்களில் கைது செய்யப்பட்ட 11 பேரில், 8 பேர் ஈ.பி.டி.பி ஆதரவாளர்கள் என்றும், ஏனைய மூவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




# பாக்குநீரிணையை முதன்முதலில் நீந்திக் கடந்த சாதனையின் பொன்விழா ஆண்டு

**பாக்குநீரிணையை முதன்முதலில் 26.03.1954 அன்று நீந்திக் கடந்த தொண்டைமானாற்றின் மைந்தன் நீச்சல் வீரன் அமரர்**

**முருகுப்பிள்ளை நவரத்தினசாமியின்**

**சாதனையின் பொன்விழா ஆண்டை தொண்டைமானாறு பிரதேச மக்கள் மனப்பூர்வமாக இந்நாளில் அவரின் சாதனையினை நினைவுகூருவதில் மகிழ்ச்சியடைகிறோம்**

நீச்சல் வீரன் பாக்குநீரிணையை நீந்தும்போது எடுக்கப்பட்ட படம்



அனுசரணை :

1. தொண்டைமானாறு சித்திவிநாயகர் ஆலய திருப்பணிச்சபை
2. தொண்டைமானாறு நற்பணி மன்றம் (லண்டன், கனடா)
3. தொண்டைமானாறு விநாயகர் சனசமூக நிலையம்
4. தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்

(676)

# குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் மழை குறைவான காரணத்தினால், குடிநீர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. பிரதேசங்களில் தேவையான குடிநீர் தொடர்பான விபரங்கள் திரட்டப்படுவதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ப.திலகநாயகம் போல் தெரிவித்தார்.

பருவமழை குறைவான காரணத்தினால் - ஊர்காவற்துறை, வேலணை, நெடுந்தீவு, காரைநகர், சாவகச்சேரி போன்ற பிரதேசங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுவருகின்றது.

எனவே - இந்தவருடம் ஏப்ரல் மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு தேவையான குடிநீர் அளவு தொடர்பாக அந்தந்தப் பிரதேச கிராமசேவகர்கள் ஊடாக விபரங்களைத் திரட்டி, பிரதேச செயலாளர் ஊடாக குடிநீர் வழங்க வேண்டிய விதிகளுடன் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர்களை மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

குடிநீர் பற்றாக்குறை தொடர்பாகவும், தேவையான குடிநீர் தொடர்பான விதிகள் சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று இன்று மதியம் 2 மணியளவில் மேலதிக அரச அதிபர் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் - சிவஞானம்

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், தங்கோடை காரை நகரை வசிப்பிடமாகவும் (முன்னர் உருத்திரபுரம் 10 ஆம் வாய்க்காலில் வசித்த) கொண்ட நாகலிங்கம் - சிவஞானம் நேற்று அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் இராசமணியின் அன்புக்கணவரும், மனோகரனின் அன்புத் தந்தையுமாவார். இன்று அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- மனோகரன் (மகன்)

(சி/2344)


நிறஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், ஆனந்தராஜ் நடித்த

சேனா

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

Chicken Run

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்

வசீகரன், பூஜா




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2263)

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - யாழ்.மாவட்டம் - 2004

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



- மறத்தமிழர் நாம் மண்டியிட மாட்டோம் என்பதை சிங்கள தேசத்திற்கு உணர்த்திட...
- புலிகளின் பின்னால் விடுதலைக்கு உழைக்க ஒன்றுபட்டோம் என்பதை வெளிப்படுத்திட...
- இனத்தை விற்றுப் பிழைப்போரை எட்ட விரட்டிட...

அளியுங்கள் உங்கள் வாக்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு

தாயகத்தின் விடிவுக்காக ஜனநாயக வழியில் போராடி தியாகியான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வன்

தமிழ்த்தேசியத்தின் விடிவுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றும் செயல்வீரர்

இல. 8



மாமனிதர் குமாரின் வாழ்வில் பயணிக்கும் கொள்கை வீரர்களுக்கு உங்கள் விருப்பு வாக்கை வழங்கி பெருவெற்றி பெறச் செய்யுங்கள்.



இல. 9

திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திரு.சீ.வீ.கே.சிவஞானம்

கூட்டமைப்பின் வெற்றி தமிழினத்தின் வெற்றி

மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு (கனடா)

இலங்கைத் தமிழரசுக் கட்சி X

(693)

# தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினேன்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பதற்கு வடக்கு- கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் சார்பிலேயே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதமரின் 55 ஆவது பிறந்ததினத்தை ஒட்டி நேற்றுமுன்தினம் தனியார் தொலைக் காட்சி ஒன்றினூடாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஒஸ்லோ உடன்படிக்கையின்படி சமஷ்டி அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடைபெற்றது.

இந்த நிலையில் வடக்கு- கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள திட்ட வரைபுகள் குறித்தே பேச்சுவார்த்தை நடத்த முடியும். பேச்சுக்களில் இணக்கம் ஏற்படலாம் இணக்கம் ஏற்படாமலும் விடலாம்.

இணக்கம் உள்ள விடயங்களில் இருவரும் இணைந்து போகலாம். இணக்கம் இல்லாத பிரச்சினைகளை இருதரப்பினரும் பேச்சுக்களை நடத்தி இணக்கத்துக்கு வரலாம்.

இவ்வாறான தீர்மானத்தின் அடிப்டையிலே விடுதலைப் புலிகளின் திட்ட வரைபு குறித்து பேச்சுக்களை நடத்தத் தயாராக இருக்கின்றோம். இதில் எந்த மாற்றமும் இல்லை. ஒஸ்லோவில் நடைபெறும் பேச்சுக்கள் - நிபந்தனையின்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறிவருகிறார்.

அங்கு நடைபெறும் பேச்சுக்களில் சர்வதேசநாடுகள், அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய முத்தரப்பினருமே கலந்து கொள்கின்றனர். இதனால் எவரும் இதில் ஏமாற்றிவிடமுடியாது.

இந்தப் பேச்சுக்களில் ஏற்படும் இடர்பாடுகள் நாட்டின் இறைமையை எந்த விதத்திலும் பாதிக்காது அதற்கு உட்பட்டதாகவே இருக்கும்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைத்தால், ஏப்ரல் மாத இறுதியில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கலாம்.

ஜனாதிபதியிடம் சமாதானம் தொடர்பாக எந்தத் தீர்வுத் திட்டமும் கிடையாது. தேர்தல் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடித்து, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே இந்தத் தேர்தலை ஜனாதிபதி நடத்துகினறார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ சீருடைத்துணி பெருமளவில் கண்டுபிடிப்பு

வனப்பகுதிகளில் இராணுவத்தினர் அணியும் உடைகளை ஒத்தபெருமளவான சீருடைத்துணிகள் உறுகொடவத்தையில் உள்ள களஞ்சிய அறை ஒன்றிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இவை கடந்த 15 ஆம் திகதி மலேசியாவிலிருந்து கப்பல்மூலம் கொழும்பு துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

ஒரு இலட்சத்து 20 ஆயிரம் யார் நீளமான இந்தத் துணியை மலேசியாவிலுள்ள ஒருவர் -வெள்ளவத்தை இளைஞர் ஒருவருக்கு அனுப்பி வைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (01)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார செலவினங்களின் விபரத்தை வெளியிட வேண்டும்

### பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கு தமக்கு வழங்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் கேள்வி யெழுப்பும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாம் தேர்தல் பிரசாரத்திற்காகச் செலவு செய்யும் நிதி தொடர்பான தகவல்களை வெளியிடவேண்டும் எனப் பவ்ரல் அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்றிகோ - எந்தவொரு கட்சியும் இது தொடர் பில் தம்மிடம் கேளவியெழுப்பும் பட்சத்தில், தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக வழஙகப்பட்ட நிதி தொடர்பாக, முழுமையான விளக்கமளிக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பது தொடர்பாக, அவரிடம் கேட்கப்பட்டபோது, இம்முறை இந்த வாக்காளர்களது வாக்களிக்கும் உரிமைக்கு எவ்வித தடையும் விதிக்கப்போவதில்லை என்று இராணுவத் தளபதி தமக்கு உறுதியளித்திருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த வாக்களிப்புநிலையங்களை, விடுதலைப் புலிகளுடைய சோதனைச் சாவடியில் அமைக்குமாறும், அதற்கு உதவும் வகையில் தமது சோதனை நிலையத்தை தாம் 500 மீற்றருக்கு அப்பால் பின்னநகர்த்த முடியும் எனவும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், எழுத்துமூல உத்தரவாதம் தந்திருப்பதாகவும் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்தார்.

## அனைத்து அரச ஊடகங்களுக்கும் தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

ஊடகங்கள் பக்கச்சார்பின்றி செயறபட வேண்டுமென தன்னால் அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை, அரச ஊடகங்கள் முறையாக மதிக்கத் தவறி வருவதாக தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச ஊடகங்களின் இத்தகைய செயற்பாடுகள் தொடருமேயானால், தனது அதிகாரத்தின் மூலம் ஊடகங்களின் பக்கச்சார்பு தொடர்பாக விசாரணை ஆணைக்குழு ஒன்றினை அமைக்க நேரிடுமெனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க எச்சரித்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது, தவறான தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமற்ற முறையில் வெளியிட முயற்சிக்கும் ஊடகங்களுக்கெதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சரியான தேர்தல் முடிவுகளை ஒளிபரப்புவதற்கான ஒத்துழைப்பினை இத்தகைய ஊடகங்களுக்கு தேர்தல் ஆணையகம் வழங்காதெனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமையைப் பேணுவதில் புலிகள் பெரும் பங்காற்றுகின்றனர்

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் மனித உரிமையைப் பேணுவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும் பங்காற்றி வருவதாக, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 60 ஆவது மாநாட்டில் இலங்கை சார்பாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அடிப படை மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதையே, ஐக்கிய தேசியக் கட்சி தனது சமாதான முன்னெடுப்புக்களில் முக்கியத்துவப்படுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்குச் சர்வதேச சமூகம் பெரும் பங்களிப்பு செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தப்பியோடிய இராணுவத்தினரை விலக்கும் திட்டம் நடைமுறையில்

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை உத்தியோகபூர்வமாக விலக்கிக் கொள்ளும் திட்டம் தற்போது கொழும்பு மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, மலே வீதியிலுள்ள இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நிலையத்தில் தற்போது இவ்வாறு இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் நேரில் சென்று தம்மை உத்தியோகபூர்வமாக இராணுவத்திலிருந்து விலக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு தப்பியோடியவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும், அவர்களுக்கான சீருடைகளுக்கும் செலவான பணத்தை அவர்கள் செலுத்த வேண்டியதில்லை என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த வாய்ப்பை அவர்கள் அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதாக படை உயரதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் இவ்வாறு 2,700 இராணுவத்தினர் தப்பியோடியுள்ளதாகவும், இவர்களுள் குறைந்தது 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுவர் என்று தாம் நம்புவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து விலகியவர்களை இவ்வாறு உத்தியோகபூர்வமாக விலக்கிவிடும் திட்டம் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆனாலும், இந்த மாவட்டத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய 4,300 பேரில், 1,020 இராணுவத்தினரும், 268 தொண்டர் படையினரும் மாத்திரமே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தம்மைக் கௌரவமாக விலக்கிக் கொண்டுள்ளனர்.

இதேபோல், 2,200 தப்பியோடிய இராணுவத்தினரைக் கொண்ட களுத்துறை மாவட்டத்தில் - 385 இராணுவத்தினரும், 148 தொண்டர் படையினரும் மட்டுமே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியுள்ளனர்.

இராணுவத்திலிருந்து இது வரை 50 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் தப்பியோடியுள்ளனர் என்பதும், தற்போது அங்கு இடம்பெறும் பல்வேறு வனமுறைச் சம்பவங்கள் மற்றும் சட்டவிரோதச் செயல்களுடனும் இவர்களில் பலர் தொடர்பு கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இடம்பெற்ற பல்வேறு தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடனும் தொடர்புபட்ட 179 தப்பியோடிய இராணுவத்தினர் இதுவரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



காரைநகர் சுந்தரமூர்த்தி நாயணர் வித்தியாசாலையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (91)

### திருப்பாடுகளின் காட்சி நாடகச் சித்திரம்

கருணாரெட்ணம் அடிகளாரினால் தயாரித்து, நாவாந்துறை பங்கு மக்கள் வழங்கும் என்.எம். பாலச்சந்தரின் 'கல்வாரி கண்ட கடவுள்' திருப்பாடுகளின் காட்சி - பக்தி இறை உரை நாடகச் சித்திரம் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் மாலை 7.00 மணிக்கு நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## பொதுச்சொத்துக்கள் துஷ்பிரயோகம் தொடர்ந்து இடம்பெறுகிறது

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் அரசியல்வாதிகள் -பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யும் மோசடிகள் தொடர்ந்தும் இடம் பெறுவதாக பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

அரச வாகனங்களைப் பயன்படுத்துவது குறைந்திருந்தாலும், போலி இலக்கத்தகடுகள் கொண்ட வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இழப்புக்களை தவிர்ப்பதற்காக மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்ட நிதித்துறை பிரமாணங்கள் ஏன் அமுல் செய்யப்படுவதில்லை எனப் பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதற்கான அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

இது சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பி, அதன் பதிலை எதிர் பார்த்து இருப்பதாகவும் அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில் தேர்தல் பணிகளுக்கு 14 ஆயிரம் பொலிஸார் கடமையில்

பொதுத் தேர்தலின்போது, கிழக்கு மாகாணத்தின் தேர்தல் கடமைகளுக்காக 14 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத் தப்படவுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜேசிங்க தெரிவித்தார்.

அத்துடன், இம்முறை பொதுத் தேர்தலின்போது கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு, பொலிஸாரின் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவே ள, மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடலொன்று இனறு நடைபெறவுள்ளதாகவும், இதில் பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும், மட்டக்களப்புக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் நாலக டி சில்வா தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது மட்டக்களப்பு மாவட்டத் தின் பாதுகாப்புத் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### லாகூரில் பெற்ற வெற்றியின் மூலம்

# பாகிஸ்தானில் ஒருநாள் தொடரை முதன்முதலாக இந்தியா வென்றது



(லாகூர்)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் லாகூரில் நடந்த ஐந்தாவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் போட்டியில் - இந்தியா 40 ஓட்டங்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்து, தொடரைக் கைப்பற்றியதுடன், பாகிஸ்தான் மண்ணில் இந்திய அணி பெற்ற முதலாவது ஒருநாள் போட்டித் தொடர் வெற்றியும் இதுவாகும்.

பகலிரவு ஆட்டமாக நடந்த இப்போட்டியில், முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற (நடந்து முடிந்த ஐந்து போட்டிகளிலும் பாகிஸ்தான் அணித்தலைவரே நாணயச் சுழற்சியில் வென்றது குறிப்பிடத்தக்கது) இன்சமாம் உல்ஹக் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷேவாக் பவுண்டரியுடன் தனது கணக்கையும், இந்திய அணியின் கணக்கையும் ஆரம்பித்தார். ஷேவாக்கும் டெண்டுல்கரும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில், ஷேவாக் 20 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் எண்ணிக்கை 34. அதன் பின், டெண்டுல்கருடன் இணைந்தார் லக்ஸ்மன். இந்தஜோடியும் ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருக்கையில் டெண்டுல்கர் 37 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் 3 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக லக்ஸ்மனுடன் இணைந்தவர் அணித்தலைவர் கங்கூலி. மூன்றாவது விக்கெட்டுக்காக இந்தஜோடி தமக்கிடையே 91 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. 33 ஆவது ஓவரில் அணியின் எண்ணிக்கை 171 ஆக இருக்கும்போது, கங்கூலி 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின் இந்திய விக்கெட்டுக்கள் அனைத்தும் சொற்ப ஓட்டங்களுக்குள் சரிந்தபோதும் லக்ஸ்மன் மிகச்சிறப்பாக விளையாடி, சதத்தினைப் பெற்றுக்கொண்டார். (இது இவரது 6 ஆவது! சதமாகும்). 50 ஓவர்கள் நிறைவில் இந்தியா 7 விக்கெட் இழப்பிற்கு 293 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், ஷேவாக் 20, டெண்டுல்கர் 37, லக்ஸ்மன் 11 பவுண்டரிகள் அடங்கலாக 104 பந்துகளில் 107, கங்கூலி 45, ஆகியோர் கூடுதலான ஓட்டங்களையும். இர்பான்பதான் ஆட்டமிழக்காமல் 12 பந்துகளில் 20, பாலாஜி ஆட்டமிழக்காமல் 6 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் மொகமட் சமி 3, சபீர்அகமட் 2, சொகைப் அக்தார், சொகைப் மலிக் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

294 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில், (இது பாகிஸ்தான் அணிக்கு பெரிய இலக்கல்ல) ஆடத்தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி. அதன் நம்பிக்கைக்குரிய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் யாசிர் கமீட் இரண்டாவது ஓவரில் இரண்டு ஓட்டங்கள் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் எண்ணிக்கை 8. அடுத்த மூன்றாவது ஓவரில் அணி 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், யுனுஸ்கானின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இந்த நிலையில் 96 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் முக்கிய ஆறு துடுப்பாட்ட'வீரர்களை இழந்து, நெருக்கடியில் இருந்தது.

இவ்வேளையில் 7 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சொகைப் மலிக், மொயின கான் ஜோடி தமக்கிடையே 99 ஓட்டங்களை 97 பந்துகளில் பெற்றது. 7 ஆவது விக்கெட்டுக்காக பாகிஸ்தான் அணி, இந்தியாவுக்கெதிராகப் பெற்ற அதிகூடிய ஓட்டம் இதுவாகும். இந்தநிலையில், சொகைப் மலிக் 65 ஓட்டங்கள் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார்.

9 ஓவர்கள் மீதமிருக்கையில் 99 ஓட்டங்களைப் பாகிஸ்தான் எடுக்கவேண்டிய நிலையில் மொயின் கானுடன் இணைந்தவர் மொகமட் சமி. இவர்கள் இருவரும், 26 பந்துகளில் 23 ஓட்டங்களை குவித்தனர். இந்தநிலையில் சமியின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இறுதியாக, நான்கு ஓவர்களில் பாகிஸ்தான் 48 ஓட்டங்களை எடுக்கவேண்டிய நிலையில் இருந்தது.

ஆனாலும், அடுத்துவந்த அக்தார் ரன் அவுட் ஆகவும், மொயின்கான் 'போல்ட்' ஆகவும், பாகிஸ்தான் 47.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களை மட்டும் எடுத்ததனால், 40 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இதில், மொயின்கான் 72, சொகைப் மலிக் 65, இன்சமாம் உல்ஹக் 38, மொகமட் சமீ 23, தபீக் உமர் 18, யுனுஸ்கான் 12, ஓட்டங்களைக் குறிப்பிடும்படியாகப் பெற்றனர். நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் அணியில் சகீப் அப்பரிடிக்குப் பதிலாக தபிக் உமர் சேர்க்கப்பட்டார்.

பந்துவீச்சில் இர்பான் பதான், பாலாஜி இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும், முரளிகார்த்திக், சகீர்கான், ஷேவாக் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகனாக லக்ஸ்மனும், தொடர் நாயகனாக இன்சமாம் உல்ஹக்கும் தெரிவாகினர். இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்தொடரின் முதலாவது போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முல்தானில் ஆரம்பமாகின்றது, இதேவேளை, நேற்றுமுன்தினம் நடந்தபோட்டியில் காயமடைந்த இந்திய அணியின் கப்டன் கங்கூலி முதலாவது டெஸ்ட்டில் விளையாடமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இறுதிப் போட்டியினை முஷாரப்பும் பார்த்தார்



(லாகூர்)

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதிய கடைசி ஒருநாள் போட்டி லாகூர் கடாபி விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் பகல் - இரவாக நடந்தது. இந்தப் போட்டியை பாகிஸ்தான் அதிபர் முஷாரப் நேரில் பார்வையிட்டார்.

அரங்கில் முக்கிய பிரமுகர்களுக்கான இருக்கையில் அமர்ந்து ஒரு மணி நேரத்துக்கு மேல் அவர் ஆட்டத்தை ரசித்தார். இதற்காக அவர் இஸ்லாமாபாத்தில் இருந்து இராணுவ ஹெலிகொப்ரர் மூலம் வந்தார். ஏற்கனவே ராவல்பிண்டியில் நடந்த 2 ஆவது போட்டியை முஷாரப் பார்த்தார்.

நேற்றுமுன்தின ஆட்டத்தை இந்திய மத்திய அமைச்சர்கள் சத்ருகன்சின்ஹா, விக்ரம் வர்மா, விஜய் கோயல், ஜெய்ப்பூர் மகாராணி காயத்திரிதேவி, முகமது அலி ஜின்னாவின் பேரன் நூலிசி வாடியா ஆகியோர் முக்கிய பிரமுகர்களுக்கான இடத்தில் அமர்ந்து கண்டுகளித்தனர்.

## 2 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார் லக்ஸ்மன்!

(லாகூர்)

இந்திய அணியின் முன்னணி ஆட்டக்காரர்களில் ஒருவரான வி.வி.எஸ்.லக்ஸ்மன் பாகிஸ்தானுக்கு எதிரான 5 ஆவது ஒருநாள் போட்டியில் 107 ஓட்டங்கள் எடுத்தார்.

லக்ஸ்மன் நேற்றுமுன்தினம் 58 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஒருநாள் போட்டியில் 2 ஆயிரம் ஓட்டத்தைக் கடந்தார். 72 போட்டிகளில் இதுவரை ஆடியுள்ள லக்ஸ்மன் 9 அரைச்சதம், 6 சதத்துடன் இந்த ஓட்டங்களை எடுத்துள்ளார்.

# விளையாட்டு

### ஒருநாள் கிரிக்கெட் போட்டியில்

## சென். ஜோன்ஸ் பழைய மாணவர்கள் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தனர்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் - யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் இடையே நடைபெற்ற 40 ஓவர் கிரிக்கெட் போட்டியில் - சென்ஜோன்ஸ் பழைய மாணவர் அணி 53 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதன்படி 39 ஓவர்கள் 2 பந்துகளை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் அணித்தலைவர் சிவசுதன் 34 ஓட்டங்களையும், சஞ்சீவ் 39 ஓட்டங்களையும், கௌரிபாகன் 46 ஓட்டங்களையும், அகிலன் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.


யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவ அணி சார்பில் பி.சுதர்சன் 7 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், சதீஸ் 8 ஓவர்கள் பந்துவீசி 44 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 211 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றிபெறலாம் என ஆடிய மத்திய கல்லூரி பழைய மாணவ அணி, 27 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால், 52 ஓட்டங்களால் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவ அணி போட்டியில் வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு கல்லூரி பழைய மாணவ அணிகளிலும் வெளிநாடுகளிலிருந்து வந்த பல வீரர்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

### அவுஸ்ரேலியாவுடனான மூன்றாவது டெஸ்ட்

## இலங்கை 2 விக்கெட்டுக்களுக்கு 239



இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று, ஆட்டநேரமுடிவின்போது இலங்கை அணி தனது முதல் இனிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக அவுஸ்ரேலியா தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 401 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இவ்வணிசார்பாக லீமன் 153, பொன்டிங் 92, வோன் 32, ஹைடன் 25, கில்கிறிஸ்ட் 22 ஓட்டங்களைக் கூடுதலாகப்பெற்றனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 5, சமிந்தவாஸ் 3, சமரவீர, ஜெயசூர்யா இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். முரளிதரன் நேற்று பெற்ற ஐந்து விக்கெட்டுக்களுடன், டெஸ்ட் வரலாற்றில் அவர் ஐந்தாவது முறையாக 5 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளதுடன் 510 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

தனது இரண்டாவது இனிங்ஸை தற்போது விளையாடிக்கொண்டிருக்கும் இலங்கை அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் ஜெயசூர்யா 71, சங்ககார 22 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர். தற்போது அத்தப்பத்து 109(இது இவரது 12 ஆவது சதம்) ஜெயவர்த்தன 29 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் லீமன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

## பழங்குடி இனத்தவர் 31 பேர் அசாமில் சுட்டுக்கொலை!

அசாம் மாநிலத்தில் பழங்குடி இன மக்கள் வாழும் 4 கிராமங்களில் புகுந்த குகி தீவிரவாதிகள் 31 பேரைப் படுகொலை செய்தனர்.

அசாம் மாநிலம் கார்பி அன்ஜியோங் மாவட்டத்தில் பழங்குடி இன மக்கள் வசிக்கும் உதேன் லிசோகாவுன், சர்போலி ராங், சர்கே என்ஜியாங், ஜாரிகாவுன் ஆகிய 4 கிராமங்களில் நேற்றுமுன்தினம் அதிகாலை- துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களுடன் புகுந்த 'குகி' தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

சர்போலிராங், சர்கே என்ஜி யாங் கிராமங்களில் நுழைந்த தீவிரவாதிகள் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த பழங்குடி இனத்தைச் சேர்ந்த இளைஞர்களை வெளியே இழுத்து வந்து வரிசையாக நிற்கவைத்து சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

மற்ற இரு கிராமங்களில் புகுந்த தீவிரவாதிகள் பழங்குடி இன மக்களின் குடியிருப்புகளில் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டதுடன், கோடாரி மற்றும் வாளால் பலரை வெட்டினார்கள். பின்னர் தீவிரவாதிகள் அனைவரும் காட்டுப் பகுதிக்குள் தப்பியோடிவிட்டனர்.

4 கிராமங்களிலும் தீவிரவாதிகள் நடத்திய வெறித்தாக்குதலில் 31 பேர் பரிதாபமாக இறந்தனர். 10 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் துணை இராணுவப் படையினர் அங்கு விரைந்தனர். பழங்குடி இன மக்கள் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளைப் பிடிக்கத் தீவிரவேட்டை நடத்திவருகிறார்கள். 31 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தால் முக்கிய இடங்களில்பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## குரல் பரிசோதனைக்கு வைகோ ஒத்துழைக்கவில்லை

### அரச வழக்கறிஞர் தெரிவிப்பு

குரல் பரிசோதனைக்கு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. ஒத்துழைக்க மறுத்ததாக பொடா வழக்கில் அரசுத்தரப்பு ஒருவர் சாட்சியம் தெரிவித்தார்.

மதுரை திருமங்கலத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக வை.கோ உள்ளிட்டவர்கள் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பூந்தமல்லியில் உள்ள பொடா நீதிமன்றத்தில் விசாரணை நடந்துவருகின்றது.

சாட்சிகளின் குறுக்கு விசாரணை நடந்தபோது அரசுத் தரப்பில் ஆஜரான வேலூர் தாசில்தார் மோகன்ராஜ் கூறுகையில்-

வை.கோவிடம் குரல் பரிசோதனை நடத்துவதற்காக நானும் விசாரணை அதிகாரி லியோ என்பவரும் வேலூர் சிறைக்குச் சென்றோம். அங்கு வை.கோவிடம் குரல் பரிசோதனை நடத்தவேண்டும் என்று கூறினோம். இது தொடர்பான அறிக்கை ஒன்றையும் தயார் செய்து வை.கோவிடம் கொடுத்தோம். அதைப் படித்துப் பார்த்துவிட்டு அவர் கையெழுத்துப் போட்டார். இருப்பினும் குரல் பரிசோதனைக்கு அவர் ஒத்துழைக்கவில்லை. இப்படிச் செய்தால் ஏற்படும் விளைவுகள் குறித்துத் தெரியுமா என்று வை.கோவிடம் அதிகாரி லியோ கேட்டபோது, எனக்குத் தெரியும் என்று வை.கோ. பதிலளித்தார்.

பின்னர் குரல் பரிசோதனையைக் கைவிட்டு வந்துவிட்டோம் என்றார் தாசில்தார் மோகன்ராஜ்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சின்னஞ்சிறு செய்திகள்

### செயற்திட்ட கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் யுனிசெவ் அனுசரணையுடன் - கணித மொழித் திறன் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிககு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தெனமராட்சி வலயத்திற்கு உட்பட்ட சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு - வலயக் கல்விப் பணிபபாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

### ஓய்வூதியம் பெறுவோர் தொடர்புகொள்ளக் கோரிக்கை

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஓய்வூதியம் பெறுபவர்களின் விபரங்கள் மீளாய்வு செய்யப்படுகிறன.

இந்த பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோர் - எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நாட்களில் மாலை 1 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பிரதேச யெலகத்துடன் தொடர்புகொள்ளமாறும், செயலகத்தினூடாக ஓய்வூதியம்பெறும் ஓய்வூதியர்களின் சிரமங்களைப் போக்குவது தொடர்பாகவும், அவர்களின் இருப்பிடத்தை உறுத்திப்படுத்துவதற்கும், ஓய்வூதியம் பெறும் அனைவரையும் தம்முடம் தொடர்புகொள்ளுமாறு, உதவிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

### சைவ விளக்கு நூல் வெளியீட்டு விழா

பலாலி ஆசிரியர் கலாசாலை சைவ மாணவர் மன்றத்தின்- 'சைவ விளக்கு நூல்' வெளியீட்டு விழா- இன்று காலை 9.30 மணிககு நல்லூர் இளங் கலைஞர்மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சைவ மாணவர் மன்றத் தலைவர் சு.ப.சுதர்சன் தலைமையில் இடமபெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் பிரதி அதிர் கலாநிதி க.சச்சிதானந்தம், சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் சோ. பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்த கலாநிதி மா.வேதநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நூலின் வெளியீட்டுரையை பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் த.காங்கேசபிள்ளையும், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் நாச்சியார் செல்வ நாயகமும் வழங்குவார்.

# தமிழர்களின் உரிமை மறுக்கப்பட்டால் மீண்டும் போராடத் தயாராகவுள்ளோம்

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்குப் பேரினவாதிகள் தடையாக இருந்தால், மீண்டும் போராடித் தாயகத்தின் விடுதலையை வென்றெடுப்போம், அதனை எந்தச் சக்திகளாலும் தடுக்கமுடியாது என்று கூறினார்- தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா.

கடந்த செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு, உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் -

இந்தத் தேர்தலினூடாக தமிழ் பேசும் மக்களுடைய இலட்சியத்தை அடைவதற்கான அரசியல் பலத்தை நாம் பெறமுடியும். ஆனால், இலட்சியத்தை அடையமுடியாது. இருப்பினும், மாறிவரும் உலக ஒழுங்கிலே விடுதலைப்புலிகள் பற்றிய தவறான அபிப்பிராயம் ஒன்று நிலவியது. கடந்த இரண்டு வருட காலத்தில் கிடைத்த சமாதான காலத்தில், இயன்றவரை அந்த எண்ணப்பாட்டை மாற்றியமைத்துள்ளோம். அந்த அடிப்படையில் இன்று தோன்றியுள்ள இந்தத் தேர்தல் நிலைமை தமிழ் மக்களின் எண்ணங்களை உலகுக்கு எடுத்துக் கூறுகின்ற ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் - விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைககால வரைபை வலியுறுத்துகிறார்களா? தன்னாட்சி அதிகார அமைப்பை விரும்புகின்றார்களா? என்று உலகுக்கு எடுத்துக்கூறி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடன் ஒன்றாக நிற்கின்றார்கள் என்பதனையும், இதுவரை காலம் உயிர்நீத்த மாவீரர்களின் கனவு வீண போகவில்லை என்பதனையும் வெளிக்காட்டும் சந்தர்ப்பமாக இருக்கும்.

சர்வதேசம் தமிழ் மக்கள் தேர்தல் மூலம் என்ன கூறுகின்றார்கள் என்பதனை மிகவும் கூர்மையாக நோக்குகின்றது. அத்துடன், தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் மறுபுறத்திலே, தமிழர் தரப்பிலும் பல கட்சிகள் உள்ளன. எல்லோருடனும் பேச வேண்டும் எனக்கூறி வெறுமையாகக் காலத்தை இழுத்துப்பிடித்துக் கொண்டுள்ளார்கள்.

எனவே, இந்தத் தென்னிலங்கைச் சக்திகளுக்கும், சர்வதேசத்திற்கும் எடுத்துக்காட்டும் வகையில் விடுதலைப் புலிகளாகிய நாம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முழுமையாக ஆதரிப்பதுடன், நேரடியாகப் பிரசாரப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளோம், எனவே, நீங்கள் ஏப்ரல் 2 ஆம் திகதி இதனை ஒரு தேசியக் கடமையாக ஏறறு, அதிகாலையிலேயே வாக்குச் சாவடிகளுக்குச் சென்று இதனைச் செய்யவேண்டும். நான் சென்றுபார்த்த இடங்களில் எல்லாம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஆதரவு அலை பொங்கிக்கொண்டு இருப்பதனைக் காண முடிகின்றது. இது மகிழ்ச்சியைத் தருகிறது.

சில தீய சக்திகள் தமது பிரசார நடவடிக்கைகளின் போது தாமும் தமிழ்த்தேசியத்திற்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ளவர்களின் முரண்பாட்டினால் பிரிந்து, தேர்தலில் நிற்கின்றோம். வேறு சிலர் - அபிவிருத்தி செய்வோம், வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவோம் என்று கூறுகின்றார்கள். உண்மையில் எமது உரிமைகளும், உடமைகளும் எமக்குக் கிடைத்தால், நாங்கள் எமது நாட்டை அபிவிருத்தி செய்வோம்.

அதுவே, எமது மாவீரர்களின் கனவும். நாங்கள் அரசையோ, அல்லது சந்திரிகா அரசையோ நம்பி எதிர்பார்த்துக் கூறவில்லை. நாங்கள் இடைக்கால வரைபின் அடிப்படையிலேயே எமது நடவடிக்கைகளை முன்னெடுத்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோம்.

தென்னிலங்கையில் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்கலாம். அதற்கு நாம் தடையாக இருக்கமாட்டோம். ஆனால், நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை வென்றெடுக்க சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேசுவோம். அதற்குத் தடையாக பேரினவாதிகள் இருந்தால், எமது இலட்சியத்தை அடைய நாம் மீண்டும் போராடியே எமது விடுதலையைப் பெறுவோம். அதனை எவராலும், எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்று கூறினார்.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## ஆறாவது அகவையில்



பெயர் : பு.கோபிகா
முகவரி : கோணப்புலம், மல்லாகம்.

## ஏழாவது அகவையில்



பெயர் : தி.ஷர்மி
முகவரி : கட்டுடை, மானிப்பாய்.

## ஒன்பதாவது அகவையில்



பெயர் : அ.றொனிசன் போல்
முகவரி : 7 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

# முன்னறிவித்தல் இன்றி நாய்களை பிடித்து அழிப்பதாக முறைப்பாடு

சாவகச்சேரி நகரசபையினர்- முன் அறிவித்தல் இன்றி, தமது நாய்களை பிடித்து அழிக்கும் வேலையில் ஈடுபட்டு வருவதாக - அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வழமையாக இந்தப் பணியை ஆரம்பிக்கும் இடங்கள் முன்னரே அறிவிக்கப்பட்டு, மக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரே, வீதிகளில் அலைந்து திரியும் நாய்களையே நகரசபையினர் பிடித்து அழிப்பது வழமை.

எனினும், பிரதான வீதிகளில் கூடியளவு நாய்கள் திரிந்து, வீதி விபத்துக்களுக்குக் காரணமாக அமைகின்ற போதிலும், உள்ளூரில் உள்ள வளர்ப்பு நாய்களை முன் அறிவித்தல் இன்றி, பிடித்துச் செல்கின்றமை குறித்து, மக்கள் பெரிதும் ஆத்திரமடைந்துள்ளனர்.

எனவே, இனிவரும் காலங்களிலாவது நகர சபையினர், முன் அறிவித்தலுடனே தமது பணியினை மேற்கொள்ள வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (25)






யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலத்தின் மறைந்த லில்லிகிறேஸ் தேவசகாயத்தின் நினைவாகச் செய்யப்பட்ட வளைவை - எஸ்.எஸ். தேவசகாயம், பொலின் ஜெயேந்திரன் ஆகியோரால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# வாக்காளர் யுத்த சூனியப் பகுதியூடாக கால்நடையாகப் பயணிக்க வேண்டும்

## பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து, முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் வாக்காளர்கள் - யுத்த சூனியப் பகுதியூடாகக் கால்நடையாகவே பயணிக்கவேண்டுமென பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் எஸ்.வானகுரு - வாக்களிப்புக்காக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்லும் வாக்காளர்கள், பொதிகள் சகிதம் செல்லும் பட்சத்தில், இராணுவத்தினரின் காவலரண்களில் கடமையில் ஈடுபடுத்தப்படும் பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

அத்துடன், யாழ். மாவட்ட தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்துள்ள பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் - தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வாக்காளர்கள் இந்தமுறை சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

முகமாலையில் அமைக்கப்படவுள்ள 61 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களிலும், கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதி வாக்காளர்கள் வாக்களிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

எனினும், தேர்தல் வாக்களிப்புத் தினத்தன்று யுத்த சூனியப் பகுதிகளில் சனநெரிசல் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுவதால், இந்தப் பகுதியூடாக வாகனங்கள் பயணிப்பதை அனுமதிக்கப் போவதில்லை எனவும், பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

### குருபூஜை ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 23 ஆம் ஆண்டு குருபூசை ஆராதனை விழா - எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

# ஏ-9 வீதியால் பொருட்களைக் கொண்டுசெல்வது ஏப்ரல் 1 முதல் 2 வரை தற்காலிக இடைநிறுத்தம்

ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி - ஏப்ரல் 1 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியிலிருந்து, மறுநாள் 2 ஆம் திகதி முழுநாளும் முகமாலை சோதனைச் சாவடியூடாக, சகல பொருட்களையும் ஏற்றிவரும் வாகனங்களும் - உள்ளே வருதலும், வெளியே செல்வதும் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வாக்காளர்களின் நன்மை கருதி, புலிகளின் பிரதேசத்திலிருந்து, அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வருகின்ற வாக்காளர்களுக்கு - இலகுவாகவும், பாதுகாப்புக் கருதியும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மீண்டும் ஏப்ரல் 3 ஆம் திகதி முதல் வழமைபோல் பொருட்களை ஏற்றி வருவதற்கு முகமாலைச் சோதனைச்சாவடி திறந்து வைக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# சிநேகிதியே

**யாழ். வீரமாகாளி அம்மன் வீதியிலமைந்த பாலசிங்கம் என்பவரது வீட்டிற்குச்சென்று, அவரது மகளான கிருஸ்ணரூபா என்பவருடன் தொடர்பு கொண்டு இளம்பருவத்தில் இன்றைய காலத்து பெண்களின் வளர்ச்சி பற்றியும், சமூகத்தில் எவ்வாறு எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் முகம் கொடுத்து முன் னேறி வருகின்றார்கள் என்பதையும் பற்றி வினாவிய போது, சிறு தயக்கத்துடன் தன்னில் இருந்து ஆரம்பித்தார்.**

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், B.COM PART II வெளிவாரி பட்டப்படிப்பு படித்து முடித்து, தற்பொழுது தற்காலிக கணினி ஆசிரியராக சென். ஜோன்ஸ் கல்லூரியில் பணியாற்றுகிறேன்.

இன்றைய காலத்தில் கணினியின் அறிவு முக்கியமானதொன்றாகும். ஏனெனில், கணினி மூலம் இலகுவாக பல பல தொழில்களைச் செய்ய முடிகிறது. அத்தோடு, ஆங்கில அறிவையும் பெறக்கூடியதாய் இருக்கிறது. கணினி கற்பதற்கு ஓரளவு ஆங்கில அறிவு போதுமானது. அதனைக் கையாளும்போது ஆங்கிலமும் தானாகத் தொற்றிக் கொண்டு வரும. கணனி மயமானால் பலருக்கு வேலை இல்லாமல் போய்விடும் என்றெல்லாம் பலரும் பல மாதிரிக் கதைப்பார்கள். வெளிநாடுகளில் அதாவது, கணினித்துறைகளில் வளர்ந்து விட்ட நாடுகளில் வேலை இல்லாமல் ஒருவரும் இல்லை. ஏதோவொரு விதத்தில் வேலைசெய்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், வேலைப்பழு தான் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எல்லோருக்கும் கணினி முக்கியமானதொன்றாகும்.

உடனுக்குடன் உலகச்செய்திகளை அறிந்து கொள்ளவும் மேலதிகத் தகவல்களைப் பெறவும், E-MAIL இல் நலம் விசாரிக்கவும், பாடத்திற்குத் தேவையான பாட விதானங்களை அன்றாடம் படிக்கவும், பெரிதும் உதவும் ஒரு ஊடகமாகவும் துணைபுரிகின்றது. இன்றைய காலத்து இளைஞர்கள் பயிற்சிகளில் அக்கறை செலுத்துகிறார்கள். ஆனால், பாடத்திலே பெரிதும் அக்கறை செலுத்துவதில்லை.

நான் படித்த காலத்திற்கும், வேலை செய்கின்ற இப்போதைய காலத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. அதாவது படிக்கின்றபோது, அந்தக் காலப் பகுதியில் இன்றைக்கு என்ன படிக்க வேண்டும் என்று மட்டுமே என் மனதில் இருக்கும். வேறொன்றும் என்மனதில் இருக்க வாய்ப்பிருக்காது. வேலை செய்கின்ற இப்போதைய காலப்பகுதியில் என்னுடைய மனதில் நிறையச் சிந்தனைகள். அதாவது - மேலும் படிக்க வேண்டும், வேலையில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்றெல்லாம் எழுகின்றது. அதற்கேற்ப முயற்சிகள் எடுப்பதற்கான ஊக்குவிப்புக்களை என்னில் நானே ஊட்டி வளர்த்துக் கொண்டிருக்கின்றேன்.

களை கையாண்டு நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். இல்லையேல் எதையும் உடனடியாக எங்களுக்குத் தகுந்தபடி தீர்க்க முற்படும்போது, பிரச்சினைக்குள் நாங்களாகவே உள்ளாக்கப்பட்டு விடுவோம். இது ஒரு பந்தினை எறியும்போது, திரும்பி வந்து விழுவது போலாகிவிடும்.

பெண்களில் பலர், பல மாதிரி அதில் சில பெண்கள் தங்களை தாங்களாகவே வரையறை போட்டுக் கொண்டுள்ளார்கள். சில பெண்கள் அப்படியல்ல. மற்றையவர்களுக்கும் பாதிப்பில்லாமல் தங்களைத் தாங்களே வளர்த்துக்கொண்டுள்ளார்கள். என்றாலும், வீட்டில் பெற்றோர்கள் வளர்க்கிற முறை, தைரியம் போன்ற காரணங்களினால் மட்டுமே, பெண் மேலும் வளர உந்துகோலாக அமைகின்றன.

சமூகத்திற்குக் கட்டுப்பட்டு அன்றைய காலத்து பெண்களைப்போல் வீட்டிலேயே இருக்காமல், இன்றைய காலத்திற்கேற்ப முன்னேறுகின்ற வழியினைப் பார்க்கவேண்டும். பெண்ணானவள் நல்லாய் முன்னேறி வந்துகொண்டிருக்கின்றபோது அவர்களைத் தூற்றுகின்ற சமூகத்தின் பார்வையில் விலகிச்செல்ல வேண்டும். அப்பொழுது தான் மென்மேலும் முன்னேறமுடியும்.

பெண்கள் கல்வியில் அக்கறை காட்டாததற்கு பல காரணங்கள் இருக்கின்றது. அதாவது, வறிய வீட்டில் பிறந்த பெண்ணானவள் - மேலதிகமாகப் படிப்பதற்கு வசதியில்லாமல் அவளது கல்வி தடைப்பட்டு வீட்டிலே அடைபட்டுவிடுகிறாள். வசதி படைத்த பெண்ணானவள் - தொடர்ந்தும் படிப்பதற்கான வசதிகள் இருந்தும் விருப்பு வெறுப்புக்களைத் தீர்த்துக் கொள்வதற்காக

ரிகளுக்கிடையே ஒரு புரிந்துணர்வு கண்டிப்பாக இருக்கவேண்டும். ஏனெனில், அப்பொழு



கிருஸ்ணரூபா

துதான் மகளானவள் தன்னிடம் உள்ள பிரச்சினையை மனதிற்குள் வைத்திருக்காமல் ஒழிவுமறைவு இன்றி பெற்றோர்களிடம் சொல்

## சீதனமானது நிறையப் பெண்களின் வாழ்க்கையினை இல்லாமல் செய்கின்றது

பெண்கள் பல பிரச்சினைகளை அன்றாடம் எதிர்நோக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதாவது, இதற்கான சிறந்த வழியாக எந்தப் பிரச்சினை என்றாலும், எங்களுக்குச் சாதகமாகப் பார்க்கவேண்டும். அந்தப்பிரச்சினை என்ன ஏது என அறிந்து, அதற்கேற்ப சிறந்த வழிமுறை

தொடர்ந்தும் படிக்காமல், வீட்டிலேயே இருக்கின்றாள். ஆகவே, கல்வியை மேற்கொள்ள வசதிகள் இருந்தாலும், கல்வியை மேற்கொள்ளாத நிலையானது பணவசதி மட்டுமல்ல. அவர் அவர்களது வசதிகளைப் பொறுத்தது. மனித இயல்பு வந்து,

லித் தீர்த்துக் கொள்ளமுடியும். அதேபோல் பெற்றோர்களும் தனதுபிள்ளைகளிடம் என்ன பிரச்சினை இருக்கின்றது என்று அறிந்து கொண்டு, அதற்கேற்ப சாதகமாக முடிவு



ஒன்று இல்லை என்றால்தான், அது தேவையாக இருக்கும். அதாவது படிக்கின்ற காலப்பகுதியில் அதன் அருமை யாருக்கும் தெரியாது. வாழ்க்கைக்கு நகர்த்தப்படும்போது - அதாவது பொறுப்பு ஏற்படும்போதுதான், கல்வியின் அருமை தெரியும். இன்றைய இளமைக்காலத்தில் நாடகம், தொலைக்காட்சியில் பார்த்தல் இப்படியாக நேரம் வீணாக கழிகின்றது. கொஞ்சக்காலம் போனதும் - வீடு, குடும்பம், பிள்ளைகுட்டி என வரும்போதுதான், அதன் கஷ்ரமும் இளமைக்காலத்தினை எப்படியெல்லாம் பயன் அற்றதாக நகர்த்தினோமோ என்ற நினைவும் ஏற்படும். இளமைக்காலத்தில் தேவைகள் நிறைவு செய்யப்படும்போது, இவைகளைப்பற்றி சிந்தனைகள் வரவாய்ப்பிருக்காது.

பொருளியலில் எல்லோரும் படித்தது, மனிதத்தேவைகள் வரையறுக்கப்படாதது. கிராமப்புறங்களில் வாழ்கின்ற குடும்பங்களை எடுத்துக் கொண்டால், அவர்களின் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். ஏனெனில், அவர்களின் அன்றாடச் சம்பளம் அவர்களின் தேவைக்கு போதுமானதாக இருப்பதாலாகும். வளங்களுக்கு ஏற்பதான் தேவைகள் அதிகரிக்கப்படுகிறது. குறைந்த வளங்கள் உள்ள பிரதேசங்களில் தேவைகளும் அளவாக இருப்பதால் கிராமப்புற மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள்.

பெண்கள் சீதனம் கொடுக்க வேண்டிய தேவை இன்றைய காலகட்டத்தில் தேவையில்லை. ஏனெனில், இன்றைய காலகட்டத்துப் பெண்களும் ஆணுக்குச் சரிக்குச்சமனாக படித்து முன்னேறி, வேலை செய்கிறார்கள். ஆகவே, சீதனம் கொடுக்கவேண்டிய தேவையில்லை. அன்றைய காலத்துப் பெண்கள் வீட்டிற்குள் இருந்தபடி எந்தவித வளர்ச்சியும் இல்லாமல் இருந்தார்கள். சீதனம் கொடுத்துத்தான் திருமணம் செய்தார்கள். சீதனமானது நிறையப் பெண்களின் வாழ்வை இல்லாமல் செய்கின்றது.

வீட்டிலேயே ஒரு ஒற்றுமை இருக்கவேண்டும். அதாவது - அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோத

களைப் பெறக்கூடியதாக இருக்கவேண்டும்.

பெண்களுக்குப் பாதுகாப்பினை விட அறிவு தான் முக்கியம் மேலே மேலே முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றபோது, பல தடங்கல்கள் ஏற்படும்.

இதையும் தாண்டி முன்னேறவேண்டுமாயின், அறிவு முக்கியமானதொன்றாகும். ஆகவே அறிவைப் பெறுவதற்கு நிறையப் புத்தகங்கள் படிக்கவேண்டும்.

படிக்காமல் வீட்டில் இருக்கின்ற பெண்கள் வீட்டில் வாழ்க்கைப் பிரச்சினைக்குள் உள்ளாக்கப்படுகின்றார்கள். படித்துவிட்டு வெளியே உலாவிவரும் பெண்கள் வெளியே பிரச்சனைக்குள் உள்ளடக்கப்படகின்றார்கள். மாறி மாறி பிரச்சினைகள் உருவாக்கப் படுகின்றன.

பெண்கள் தங்களைத் தாங்களே நிவர்த்தி செய்து கொண்டால் இந்தப் பிரச்சினைக்கெல்லாம் கண்டிப்பாக வழி கிடைக்கும்.

அன்றைய காலத்து கவிஞர்கள் பெண்களை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற வகையில் பாடல்களை எழுதினார்கள். இனறு பாடல்கள் எழுதுகின்ற கவிஞர்கள் இன்றைய காலத்துப் பெண்களின் தன்மைக்கேற்பதான் பாடல்களை எழுதுகின்றார்களோ, எழுதவில்லையோ எனக்குத் தெரியவில்லை என்று முடித்தார்.

முதலில் இருட்டில் இருந்தது போல் முகத்தில் இருந்த ஏக்கம் நான் விடை பெற்றுவரும்போது வானவெளியில் சுதந்திரமாய் பறக்கும் பறவைக்கும், எனக்கும் தொடர்பு இருப்பதுபோல். ஒவ்வொரு அசைவுகளும் மேலும் சொல்ல எத்தனித்துக் கொண்டிருக்கிறது இந்தப் பெண்ணிடம்.

நேர்காணல் - செல்வா.

## தன்னிரக்கம் பெண்களின் எதிரி!



எல்லாப் பெண்களும் வாழக்கையை நம்பிக்கையுடன் தான் எதிர்கொள்கின்றனர். துள்ளி விளையாடும் பருவம்போய். குமரிப்பருவம் கடந்து திருமண உறவுக்குள் புகுந்ததும்தான், எத்தனை எத்தனை பிரச்சினைகளைப் பெண்கள் சமாளிக்க வேண்டியிருக்கின்றது. வாழ்க்கை எப்படி எல்லாம் தலைகீழாக மாறிவிடுகிறது.

எல்லா திருமண பந்தங்களும் வெற்றிகரமாக அமைந்து விடுவது இல்லை. சில திருமணங்கள் முறிந்து விடுகின்றன. பெண்கள் விதவையாகி விடுகின்றனர். சில சமயம் கணவன் கைவிட்டுச்சென்று விடுகிறார். இளமையிலேயே இந்தச் சோதனைகளை எதிர்கொள்ளும் பெண்கள் - அதன்பின் விளைவுகளையும் சமாளித்தாக வேண்டும்.

### சில யோசனைகள்

இவ்வாறான பெண்களின் முதல் எதிரி தன்னிரக்கம் எனக்கு மட்டும் ஏன் இப்படி? என ன பாவம் செய்தேன்? கடவுள் ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறார்? என்று மனக்கூட்டுக்குள் நத்தையாகச் சுருக்கும் எண்ணங்கள் ஏராளமாக வரும். அதிலிருந்து மீள் வழி? நம்மை நாமே நேசிக்க, மதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

வாழ்க்கை நம் கையில்தான் உள்ளது. நாமே நமக்கு முதல் உற்ற தோழியாகும் போது, அது வெளிப்படுத்தும் தன்னம்பிக்கை மற்றவர்களைப் படிப்படியாக நம்மை நேசிக்க, மதிக்கச் செய்யும். கசப்பான நினைவுகளை அகற்ற திருமணத்துக்கு முந்தைய மகிழ்ச்சியான நாட்களை அசைபோடலாம். அப்போது, நாம் ரசித்த விரும்பிய பொருட்கள், பாடல்கள் புத்தகங்கள் வாங்கி வைக்கலாம். கணவன் பற்றிய பேச்சு வந்தால் இருக்கிறார்... வேலை, வியாபாரம் என்ற ஒரே வரியில் பொதுவாகப்பதில் சொல்லிவிட்டு அந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவது நல்லது.

தேவைப்படும் இடங்களில் (அலுவலகங்கள், வங்கி, வைத்தியர், அரச அலுவலகம்) தயக்கமோ உறுத்தலோ இல்லாமல் தனியாக வாழ்வதாகச் சொல்லலாம். எல்லாந் தெரிந்த உறவினர்களிடம் பழையன பற்றி பேசவேவேண்டாம். அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் தெளிவாக இரண்டே வரியில் பேசி முடியுங்கள். பேச்சை வளர்க்காமல் நிறுத்தி விடவேண்டும். கடவுள் அருளால் இப்போது நிம்மதியாக இருக்கின்றேன் என்று, அடிக்கடி சொல்லிக்கொண்டால் மனம் லேசாகும்.

வெளியே செல்லும்போது, தயக்கமும், கூச்ச உணர்வு நம் முகத்திலும், செயல்களிலும் அப்பட்டமாக வெளிப்படும். அதுவே, மற்றவர்கள் கீழ்த்தரமாக ஏளனமாக மதிப்பிட வாய்ப்பளிக்கும். எனவே, முடிந்தவரை சகஜமாக, தைரியமாக, தனியாகச் செல்கிறோம் என்ற உணர்வை வெளிப்படுத்தாமல் இருக்கப் பழகுங்கள். எமக்கு ஏற்பட்ட தோல்விகள், மனக்காயங்கள், வேதனைகளைக் குழந்தைகளுக்கு அதே கோணத்தில் அப்படியே சொல்லாமல் அதன் தீவிரம் குறைத்து, அதை ஒரு நிகழ்வாகவும், செயலாகவும் பேசவேண்டும். அவர்களது வாழ்க்கைக்கு ஒரு நல்ல அடித்தளமாக, பாடமாக இருக்கவேண்டுமே தவிர அடிமனதையே உலுக்கிவிடும்படி பேசக்கூடாது. குடிகாரத்தந்தையைப் பற்றி ஒரு தாய் சொல்லும்போது, பழியை மதுவின்மீது போட்டு, தந்தை என்ற தனி நபரை மரியாதையுடன் பேசவேண்டும். அப்போது குடி, மது என்பன தீயவை என்று அவர்களுக்குப் பாடமாகவும் அதேசமயம் தந்தை என்ற தனி நபரின் மீது அன்பும் மரியாதையும் இருக்கும்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


# பிஞ்சுமுகத்தின் தேடல்

இன்று எனக்கு நல்ல சந்தோஷம். அண்ணாமாரோடு வெளியே போகப்போகிறேன். ஒரு மாதமாக, ஒரு இடமும் போகவில்லை. வீட்டிலே எல்லோரும் அடைபட்டுக் கிடந்தம். இப்ப எனக்கு ஒரு எண்ணம் வருகிறது. அப்பா... அவர் ஏன் இப்படிச் செய்தவர்! அம்மா தான் பாவம். அவளுக்கு எல்லா வருத்தமும் இருக்கு. ஆனால், அதைக் காட்டிக்கொள்ளமாட்டாள். எல்லாவேலையும் தானே செய்வாள். நான் அவளுக்கு ஏதாவது உதவிசெய்யவேணுமெண்டு நினைப்பன். ஆனால், எனக்குப் பயம். ஒருநாள்! அம்மா தண்ணியள்ளப்போற நேரம். என்ரை மூளையிலை ஒருயோசினை வந்தது. அம்மாவுக்கு நான் தண்ணியள்ளிக் குடுப்பம், ஓடிப்போய் தண்ணிக்குடத்தைத் தூக்கினன். மண்குடம், அவ்வளவு பாரமில்லை. கிணத்தடிக்குக் கொண்டுபோனன். அம்மா அடுப்படியிலை மா வறுத்துக்கொண்டு இருக்கிறாள். நான் போனதை அவர் காணேல்லை. கிணத்தடியிலை குடம் வைக்கிறதுக்கு ஒரு பள்ளம் இருக்கு. அதில குடத்தை வச்சன். கப்பிக் கிணறு சைக்கிள் சில்லு மாதிரி ஒரு வட்டத்திலை கயிறு போட்டிருக்கு. இரண்டு வாளி ஒன்று வெளியில கிடக்கு. மற்றது கிணத்துக்கை கிடக்கு. அண்ணயவை மூன்றுபோரும் தண்ணி அள்ளுவினம். எனக்கு அதைப்பார்க்க ஆசையாக இருக்கும். நான் வெளியில கிடந்த வாளியை எடுத்து மெதுவாக கிணத்துக்கை போட்டன். கயிற்றை மிதியில நிண்டு எட்டிப் பிடித்து இழுத்தன். அவ்வளவு கஷ்ரமில்லை. தண்ணியோட உள்ளே கிடந்த வாளி மெல்ல மெல்ல வெளியில வந்தது. அதைத் தூக்கி எடுக்க அது சரிந்து என்னைக் குளிர்க்கவாத்தது. ஐயோ!... என்ர சட்டையெல்லாம் தொப்பளா நனைஞ்சுபோச்சு. சட்டை கிடக்கட்டும். வாளிக்குச் சொன்னன் குழப்படி பண்ணாதை.... வெளுத்துப்போடுவன். திருப்பியும் வாளியை எடுத்துக் கிணத்துக்கை போட்டு, கயிற்றை மெதுவாக இழுத்துப் பக்குவமாக தண்ணியைக் குடத்துக்க விட்டன். சரியா நாலு வாளி தண்ணிவிடக் குடம் நிரம்பிப் போச்சு. பாவடையும் நல்லா நனைஞ்சு போச்சு. அதைத் தூக்கி இடுப்பில செரிகினன். சரி! இப்ப அம்மாவைப் போல குடத்தை இடுப்பில தூக்கி வைச்சுக் கொண்டுபோவம். குடத்தைத் தூக்கினன். அம்மாடி! என்ன பாரம். நாலு வாளி தண்ணி இவ்வளவு பாரமா? இதை எப்படியாவது கொண்டுபோய் வைக்கவேணும்.

அம்மாவுக்கு ஒரு வேலையைக் குறைக்கவேணும். நான் தூக்கி இடுப்பில வைக்கவும் நனைஞ்ச சட்டை வழுக்க குடம் டக்! விழுநது இரண்டாய்ப் பிளக்க நானும் வாயைப் பிளந்தன். அம்மா! என்று கூப்பிட வாயெடுக்க அம்மாவே முன்னால் நிண்டாள்.

உனக்கேனடி இந்த வேலை? சனியன்! புதுக்குடத்தைப் போட்டுடைச்சுப் போட்டு நிக்குது! என்ன நடக்கப் போகுதோ தெரியல்லை. அம்மா அண்டைக்குச் சொன்னது சரியாப் பேச்சு.

நான் குடமுடைச்சு மூண்டாம் நாள்! நான் அண்ணையவையோடை குளங்கரை விளையாடிக்கொண்டிருந்தன். அம்மா குரக்கன் திரிச்சுக் கொண்டிருந்தா. அப்பாவுக்குச் சலரோகமாம். குரக்கன் ரொட்டியும் புட்டும் தான் சாப்பாடு. இருண்டு கொண்டு வாற நேரம். கோயிலிலை வேலை செய்யிற அப்பு ஓடி வந்து அம்மாட்டை என்னவோ சொல்ல... ஐயோ!... என்ர தெய்வமே! எண்டு தலையிலை அடிச்சுக்கொண்டு எழும்பி ஓடினாள். நாங்களும் பின்னாலை ஓடினம். கோயிலுக்குப் பின்னாலை சடைச்சு நிண்ட ஆலமரத்திலை அப்பா எங்கடை வீட்டுக் கிணத்து சிவப்புக் கயிற்றிலை தொங்கிக்கொண்டிருந்தார். எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை. அம்மா அழுவதைப் பார்த்து அண்ணாமாரும், நானும் அவளைப் பிடிச்சுக்கொண்டு அழுதம். அடுத்த நாள் எனக்கு எல்லாம் விளங்கிச்சு. அப்பா தற்கொலை செய்து போட்டாராம். அம்மா என்னைப் பார்த்து அடுப்புக்கருக்கை வைச்ச கொல்லிக் கட்டையாம் எனச் சொல்லி அழுதா. அண்ணைமார் மூண்டு பேரும் அப்பாவின்ரை இறுதிச்சடங்குகளைச் செய்தினம். எனக்கு அதிலை ஒருவித பங்கும் இல்லையாம். நான் பொம்பிளைப் பிள்ளையாம். எனக்கு உருத்திலையாம். பெரியண்ணா கொள்ளிக்குடம் தூக்கிக்கொண்டு போனபோது அம்மா என்னைக் கட்டிப்பிடிச்சு அழுதா "நீ அண்டைக்கு உடைச்சாய்! இண்டைக்கு அவன் உடைக்கப்போறானடி!... பாரடி! எனக்கு அழுகை வந்தது.

அப்பா செத்த பிறகு, நான் ஒரு மாதம் வெளிக்கிடவில்லை. மூத்தண்ணா மட்டும், கடையிலைபோய் பாண் வேண்டிக்கொண்டு வருவான். அம்மா அண்ணன்மார் மூன்றுபேரையும் போன கிழமை இல்லத்திலைவிடப் போறன் எண்டு சொன்னா. அப்பா செத்துப்போனதாலை காசில்லையாம். அம்மாவுக்கு ஒருத்தரும் இல்லை. அப்பாவின்ரை சொந்தக்காரருக்கு எங்களைப் பாக்க ஏலாதாம். அண்ணையள் படிச்ச பள்ளிக்கூட சேர் தான் அடிக்கடி வீட்டை வந்து அம்மாவிட்டை விபரம் எல்லாம் கேட்டு விண்ணப்பம் நிரப்பினவர்., அவருக்கு அண்ணையவை படிக்க வேணும் எண்டு விருப்பம். எனகது அவர் வீட்டை வந்தா நல்ல சந்தோஷம். சின்னப் பாட்டுச் சொல்லித்தருவார். என்ரை குரல் தேன் குரல் என்று சொல்லுவார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், பெருமாள் கோவிலுக்குப் போகிறவராம். எனக்கு அந்தக் கோயிலுக்குப்போக வேணுமெண்டு ஆசை. பெரிய கோயிலாம். இரண்டு கோபுரமாம். நிறைய படங்கள் கீறி இருக்காம். அவர் சொல்லச் சொல்ல எனக்கு ஆசை கூடிவிட்டுது. அம்மாவிட்டைக் கேட்டேன். அம்மா சொன்னாள். கொப்பனை விழுங்கிப் போட்டு கோயிலுக்குப் போகப்போறியோ. சும்மா கிடவடி! எனக்குப் பொல்லாத கோபம் வந்தது. என்ரை சின்ன வாயாலை அப்பாவை விழுங்கலாமே. வாத்தியார் பெருமாள் கோயில் கண்ணனைப் பற்றிச் சென்னது சட்டென்று நினைவுக்கு வந்தது. அவன்ரை வாயுக்கை, தாய் பார்த்தபோது உலகம் முழுவதுமே தெரிஞ்சதாமே! நேற்று வாத்தியார்... சீ இது அம்மா கூப்பிடுறபேர்! நாங்கள் சேர் எண்டு தானே கூப்பிடுறம். எனக்கு காற்சங்கிலி கொண்டுவந்து தந்தார். நான் அப்பாவிட்டை முந்தி ஒருநாள் வாங்கித்தரச் சொல்லிக் கேட்டனான். அப்ப சேர் கேட்டுக்கொண்டு நிண்டவர். நான் காற்சங்கிலியை காலிலை போட்டுக்கொண்டு அம்மாவுக்கு நடந்து காட்டினன். நீ நல்ல நடனமாகத்தான்ரி வருவாய்! பிறகு சொன்னாள் நாளைக்கு அண்ணாவையோடை பெருமாள் கோவிலுக்குப் போட்டு வாடி! திங்கட்கிழமை அவங்களை இல்லத்திலை கொண்டுபோய் விடவேணும். அம்மாவின் கண்கள் கலங்கின. எனக்கு ஏனோ தெரியல்லை அழுகை வந்தது. நான் இனித் தனிச்சு நிக்கப் போறன்!

விடிந்ததும், விடியாததுமாய் அம்மா எழுப்பினாள். கோயிலுக்குப் போகவேணும் எழும்படி! அண்ணைமார் வெளிக்கிட்டு நெற்றிநிறைய விபூதி பூசிக்கொண்டு நின்றார்கள். நான் முழுப்பாவாடை சட்டை போட்டு வெளிக்கிட்டன். இதென்ன! பாவாடை என்ரை கால் சங்கிலியை மறைக்குது. பாவாடையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நான் நடந்துபோக எல்லாரும் என்ரை காலைப் பாக்கினம். நானும் அம்மா சொன்னது போல, நடனமாக நடந்தேன். எவ்வளவு பெரிய கோபுரம்! எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அர்ச்சனை செய்ய அண்ணா ஒரு துண்டு வேண்டினான். உந்தக் கம்பிக்கு அங்காலைதான் நிக்கவேணும். அண்ணா சொன்னான். நான் அப்படி நிண்டால் எப்பிடிச் சாமியைப் பார்க்கிறது. காலைத் தூக்கிக் கம்பியைக் கடந்து சுவாமியைப் பார்த்தன். பெருமாள் என்ரை காலைப் பார்க்கிறார்போல இருந்தது. அவருக்கும் என்ரை காற்சங்கிலியைக் காட்டியாச்சு.

ஐயர் விபூதி தரவந்தார். பிள்ளை! இறங்கி நில்லடி! விழப் போறாய். உன்ரை காறசங்கிலி காலுக்கு நல்ல வடிவாய் இருக்கு அவர் சொன்னது எனக்குப் பெருமாள் சொல்லுறது போலக் கேட்டது. நான் இறங்கித் துள்ளிக் கொண்டு வெளியே வந்தேன். இனிமேல் கோவிலுக்கு எப்பவாறது.. அம்மாவிட்டைக் கேக்கவேணும்!



**மனோன்மணி சண்முகதாஸ்.**

## குழந்தைகளுக்கு உணவூட்டுதல்


தற்போது பெற்றோர் பாலூட்டுதலுக்கு மேலதிகமாக, உடனடியாகத் தயாரிக்கக் கூடிய சந்தையில் கிடைக்கும் உணவு வகைகளையே பயன்படுத்துகின்றனர். அவற்றிலும் பார்க்க வீட்டிலேயே மிகவும் செலவு குறைந்த ஊட்டச்சத்து மிக்க உணவுவகைகளை தயாரிக்க முடியும். அவ்வாறு தயாரிக்கக்கூடிய சில உணவு வகைகள்.

**பருப்பு, கரட், கீரை கொண்ட உணவுக்கலவை**

சமைக்கப்பட்ட பருப்பு, ஆவியில் அவிக்கப்பட்ட - சமைக்கப்பட்ட பாதி கரட், கீரை சிறிதளவு என்பவற்றுடன் 1 தேக்கரண்டி நெய், சிறிதளவு சோறு, 1/4 கப் பால்.

தானியம் அவரையின் பருப்புக்கள் அடங்கிய கூழ்.

3 பகுதி தானியமா (அரிசி / சோளம்), 1 பகுதி அவரைமா (கௌபி / உழுந்து / பயறு) என்பவற்றைக் கலந்து ஆக்கிய கூழில் 5 மேசைக்கரண்டியும், 1 தேக்கரண்டி மரக்கறி எண்ணெய் / மாஜரினுடன் மேசைக்கரண்டி கீரைவகை கலந்து உணவூட்டல்.



சோறு அவரையினத்துடன் ஈரல், சோறு, அவரைப் பருப்பு, சில துண்டு வெங்காயம், சிறிதளவு உருளைக் கிழஙகு என்பவற்றை சேர்த்து சமைக்கப்பட்ட உணவுடன் சமைக்கப்பட்ட கோழி ஈரல் என்பவற்றைப் பயன்படுத்தலாம். சிறு குழந்தைகளுக்கு 1 மேசைக்கரண்டி அவரையினம், உருளைக்கிழங்கு, 3 மேசைக் கரண்டி சோறு, 1/2 தேக் கரண்டி ஈரல், ஒரு தேக் கரண்டி மாஜரீன் கொண்ட கலவையை உணவாகக் கொடுக்கலாம்.

சோறு, பருப்பு, யோகட், சமைக்கப்பட்ட சோறு, பருப்பு என்பவற்றுடன் பொரிக்கப்பட்ட வெங்காயம் சேர்க்கப்பட்ட உணவு.

குழந்தைக்கு, 3 மேசைக்கரண்டி சோறு

1/2 மேசைக்கரண்டி பருப்பு

1 தேக்கரண்டி மரக்கறி எண்ணை கலந்த உணவு.

3 மேசைக்கரண்டி யோகட் என்பவற்றுடன், பாதி தோடம்பழத்தையும் வழங்கலாம்.

மேலே கூறப்பட்ட எல்லா உணவுச் சேர்மானங்களிலும், எண்ணெய் சேர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். எண்ணெய் சக்தியை வழங்குவதுடன் உணவை மெதுமையாகவும் பேணுகிறது. 6-12 மாத வயதுடைய குழந்தைகளுக்கு 2 தேக்கரண்டி வழங்கப்படுவது போதுமானதாகும். 1-2 வருட வயதான குழந்தைகளுக்கு 3 தேக்கரண்டி மரக்கறி எண்ணை உணவுடன் வழங்கப்படுவது போதுமானது.

**குழந்தைகளின் சுயாதீனத்தை ஊக்குவித்தல்**

ஒரு வயதான குழந்தைகளுக்கு பெற்றோரின் உதவியுடன் தாமே கரண்டிமூலம், உணவுண்ண ஊக்குவிப்பது சிறந்ததாகும். உணவை சிறுதுண்டுகளாக்கி வழங்குவது அவர்கள் இலகுவாக உண்ண ஏதுவாகும்.

(தொடரும்...)

வி.ஜெயச்சந்திரன்
தகவல் தொடர்பு மையம், விவசாயபீடம்.

## அழகுக்கலை முக்கியமானதொன்று

அழகுக்கலையை பெண்கள் ஒரு முக்கியமான கலையாகப் பார்க்கின்றார்கள், ஆடம்பரமாகவும், அழகாகவும் வாழ்ந்தால்தான், எங்களை சமூகம் விரும்புகின்றது. அழகு தவிர்க்கமுடியாததொன்று. என்று நாவலர் வீதியில் அமைந்துள்ள, நாவலர் கலாசாரமண்டபத்தில் பயிற்சிகளை வழங்கிக் கொண்டிருந்த வாணியும், அங்கே பயிற்சியினை கற்றுக் கொண்டிருந்த பெண்களும் முற்றுமுழுதாக நம்பி இருக்கின்றார்கள். இதனால்தான், இந்தக் கலையினைக் கற்று அழகாக வரமுடியும் என்று அதில் ஈடுபடுகின்றோம் என்று கூறுகின்றார்கள்.

முதலில் அழகுக்கலை பற்றி பயிற்சியளிக்கும் வாணியிடம் தொடர்பு கொண்டு அழகுக்கலை பற்றி கேட்டோம். எந்தவித தடங்களுமின்றி கம்பனிகள் அறிமுகம் செய்கின்ற, கிறீம்களை வாங்கி பெண்கள் அழகினைக் கூட்ட நினைத்தால், அந்தப் பொருட்களில் எந்த இரசாயனப் பொருட்கள் கலந்திருக்கின்றார்களோ, எமக்குத் தெரியாது. இரசாயனம் கலந்த பொருட்களை வாங்கி முகத்திலோ அல்லது, உடலிலோ பூசுவதால், நிறையப் பாதிப்புக்கள் வருகின்றது.

கம்பனிகள் வியாபார நோக்கம் கருதி கிறீம்களை விற்பனை செய்கின்றார்கள் அதை வாங்கும்படி கூடுதலான விளம்பரங்களும் செய்கின்றார்கள் இதனைப் பார்த்துவிட்டு, பல பெண்கள் அவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருட்களை பயன்படுத்துவதால், பல பிரச்சினைகளுக்கு ஆளாகுகிறார்கள். இதைப் பெண்கள்தான் உணரவேண்டும் நாம் என்ன செய்ய வேண்டுமென்றால் கிறீமைப் பார்த்து வாங்கவேண்டும்.

அதிலிருந்து மீட்பதற்தாகவும், ஆயுள் மூலிகையினால் தயாரிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு தமது அழகினை, மெருகினைக் கூட்டிக்கொள்ளமுடியும். என்று, அது சம்பந்தமாகவும் பயிற்சிகளைச் செய்துவருகின்றேன். இப்படியாக அழகுக்கலைக்குத் தேவையான பொருட்களை, மூலிகையில் உற்பத்திசெய்து பயன்படுத்தும்போது, எங்களுக்கொரு நம்பிக்கை உருவாகின்றது.

வெளிநாடுகளிலிருந்து கிறீம் பொருட்களைக் கொள்வனவு செய்வதைவிட இங்கேயே நல்ல தரமான பொருட்களை வாங்கமுடியும்.

இரசாயனம் கலந்த கிறீம்களைப் பயன்படுத்திவிட்டு முற்று முழுதாக அழகுக் கலையினை ஒதுக்கிவிட முடியாது.

பல பெண்கள் பாதித்தும் இருக்கின்றார்கள். அதாவது, பிழையான வழியில் அழகுக் கலையினைக் கற்றல் - நல்லதா, கூடாதா என்று பார்க்காமல் எங்களுடைய தோல்களுக்கு பொருந்துமா என்று, பார்க்காமல் கிறீம்களைப் பயன்படுத்துதல். இவ்வாறான காரணங்களால் பெண்களின் முகம் பாதிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் வெளியிடப்படும் கிறீம்கள் இங்கே ஒத்துவருமா என பலர் கேட்கின்றார்கள். அதாவது, காலநிலையின் மாற்றம் ஏற்படுமா எனக் கேட்கின்றார்கள். அவரவர் நாட்டுக்கு ஏற்றமாதிரி உற்பத்தி செய்கின்றார்கள். நாங்கள் தான் பார்த்து வாங்கவேண்டும்.

'பெயாரன் லவ்லி'யினைப் பயன்படுத்தும்போது, இரண்டு நாளில் சிவப்பு அழகு வந்துவிடும் என்று எல்லோரும் செல்லுகிறார்கள். இதுவெல்லாம் நம்பகத்தனமான விடயமல்ல. தோலினைப் பாதுகாக்க உடற்பயிற்சி செய்யவேண்டும். உடலில் நீர் தன்மை இல்லாதபோது, கிறீம்களைப் பயன்படுத்தித்தான் முகத்தினை தேய்க்கவேண்டும். அன்றாடம் மூன்று நேரமும் கிறீம் பூசி தேய்த்து விடுவதால் ஒரு தனி அழகு கிடைக்கும் என்று சொல்லி முடித்தார்.

அங்கே, அழகுக்கலையினைக் கற்கவந்த பெண்களிடம் உரையாடியபோது, ஆளாளுக்கு கதைத்கத் தொடங்கினார்கள். அதாவது, பெண்களை அழகுபார்க்கும் ஆண்கள் - அழகுக் கலையினை ஒதுக்கமுடியாது. அழகுக்கலை தேவையா எனக் கேட்கவும் முடியாது. நாங்கள் அழகாக இருந்தால்தான், எங்களைப் பெண் பார்க்க வருகின்றார்கள் வெளிநாடுகளில் இருந்து ஆண்கள் கேட்பது அழகான பெண் இருக்கிறாளா? என்றுதான் கேட்கின்றார்கள். ஆகவே, அழகாக இருந்தால்தான் இந்த சமூகத்தில் வாழமுடியும். என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே, பெண்களின் அழகு முக்கியமான பகுதியாகும் எனவே, அழகினை ஏற்படுத்த அழகுக்கலை முக்கியமானதென்று கூறினார்கள்.

*சந்திப்பு:- செல்வா*

# இந்த வார பலன்கள்

## 26.03.2004- 01.04.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சூ. புத | சுக். ராகு | சந் செவ் | சனி |
| யுரே | 26 கா. 7.44 மேட - புத<br>27 இ.12.03 மிது - சந்<br>28 ப.2-21 இட - சுக்<br>28 ப.2-21 இட - சுக்<br>01 இ. 9 - 34 சிங் - சந் | | |
| நெப் | | | குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் நன்றாக இருந்தாலும், அலைச்சலும், பிரையாசையும் கூடுதலாக இருக்கும். குடும்பத்தில் நிம்மதிக்குறைவு ஏற்படும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகமாகும். உறவினர்களிடையேயும், உட்பூசல்கள் ஏற்படும். வாழ்க்கைச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது கடினம். கடன் தொல்லைகள் தலைதூக்கும். குடும்பப் பெண்கள் கருமங்களைச் சமாளிக்கமுடியாமல் தத்தளிப்பர். வெளிநாட்டு உதவிகளும் கிடையாது. திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தை உண்டுபண்ணும். உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தளங்களில் எதிர்ப்புகள் அதிகரிக்கும். முடிவுற்ற வேலைத்தளங்களால் குறைகள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் ஓரளவு நற்பலன் உண்டு. தொழில் முயற்சிகள் நன்மையான பலனகளைத்தரும். குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் அதிகரிக்கும். களத்திரசுகம், புத்திரசுகம் கிடைக்கும். நன்மதிப்பும் செல்வாக்கும் சிறப்பாக இருக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. தேவைக்கேற்ப பணவரவும் திருப்திகரமாக இருக்கும். எடுக்கும் காரியங்கள் வெற்றியளிக்கும். விவாக முயற்சிகள் காலதாமதத்தின்மேல் வெற்றிதரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும், திருப்திகரமாக பணிகள் நடக்கும். வியாபாரம் திருப்தியாக இலாபத்துடன் நடக்கும். வங்கி உதவிகளும் கிட்டும். மாணவர்கள் கலைத்துறையில் முன்னணி வகிப்பர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இவர்களுக்கு ஏழரைச்சனி நடுப்பகுதி ஆகையால், பலவித இன்னல்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும். குடும்பத்தில் கஷ்டங்களும், நிம்மதியின்மையும் அதிகமாகக் காட்டும். புத்திரர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும். பணம் கைக்கு வந்தவுடனேயே செலவாகிவிடும். குடும்பப் பெண்கள் தமது கருமங்களைச் சமாளிக்கமுடியாமல் தத்தளிப்பர். திருமணப பேச்சுக்கள் இழுபறியிலேயே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு பணிபுரியும் இடங்களில் பல சிக்கலகளைச் சமாளிக்கவேண்டியிருக்கும். வர்த்தகர்களுக்கு அலைச்சல் வீண் விரயம் என்பன தவிர்க்க முடியாமலிருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமிருப்பினும் எதிர்பார்த்த பலன் கிடையாது.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடக இராசிக்காரருக்கு இவ்வாரம் நற்பலன்கள் ஏற்பட இடமுண்டு. தொழில் முயற்சிகள் சிறப்பாக நடைபெறும். பணவருவாய் தாராளமாகக் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிலவும். கணவன், மனைவியிடையே அன்னியோன்னியம் நன்றாக இருக்கும். இல்லத்தில் மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் நடைபெறும். பெண்களுக்கு தமக்குரிய கைத்தொழில் முயற்சிகள் கைகூடும். திருமண முயற்சிகள் நன்மையான பலனைக்கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு நற்பலன்கள் உண்டு. அதிகாரிகள் கோரிக்கைகளை நிறைவு செய்வர். வியாபாரம் நன்றாக நடக்கும். ஏற்றுமதி, இறக்குமதிகளால் கூடிய இலாபம் கிட்டும். மாணவர்கள் கல்வியில் சிறப்பான பலன்களைக் காண்பர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



இவர்களுக்கு ஜென்ம வியாழன் இருப்பதால் எல்லாக் கருமங்களும் மந்தமாகவே இருக்கும். குடும்பத்தில் மனவேதனைகள், துன்பங்கள் அதிகமாகும். பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். உறவினர்களிடையேயும், மனஸ்தாபங்கள் ஏற்பட இடமுண்டு. தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். வைத்தியச செலவு அதிகமாகும். காதல் விவகாரங்கள் கைகூடாது. பெண்கள் குடும்பத்தேவைகளைப் பூர்த்திசெய்வதில சிரமம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். கொடுககல், வாங்கல்களில் கஷ்டம் ஏற்படலாம். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே இருக்கும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசிக்காரருக்கு இன்ப, துன்பங்கள் கலந்த பலனே நடக்கும். தொழிற்துறையில் பிரையாசை அதிகமாகும். வருவாய் பெரிதாக இருக்காது. பிள்ளைகளால் நன்மைகள் கிடைக்கும். குடும்ப சுகம குறைவாகவே இருக்கும். தேக ஆரோக்கியம் இடையிடையே பாதிப்படைவதால் மருத்துவச் செலவுகள் கூடுதலாகும். குடும்பச் செலவு அதிக கஷ்டமில்லாமல் நடக்கும். விவாகம் சம்பந்தமான பேச்சுக்களில் தடைகள் ஏற்படும். உத்தியோகத்தர்கள் வேலை சம்பந்தமாக வேறிடம் செல்ல நேரிடும். வியாபாரிகள் தொழில் சம்பந்தமான செலவுகள் அதிகமாகச் செய்ய நேரிடும். முதலீடுகளுக்குத்தக்க இலாபம் கிடையாது. மாணவர்கள் கல்வியில் அதிக முன்னேற்றம் பெறவாய்ப்பில்லை.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிக்காரருக்கு தொழிற்துறை நல்ல பயனளிக்கும். உறவினர்களிடமிருந்து பண உதவிகள், சரீர உதவிகள் கிட்டும். தேக ஆரோக்கியம் பாதிப்படையாது. எனினும், தேகநிலையைப் பேணிப் பாதுகாத்துக்கொள்வது நன்று. பணவருவாய் தேவைக்கேற்ப வரும். அயலவர்களாலும் உதவிகள் உண்டு. திருமணம் சம்பந்தமான முயற்சிகள் அதிக சிரமமின்றிக் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பலவகையாலும் முன்னேற்றங்கள் உண்டு. பதவி உயர்வு, நன்மாற்றங்கள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். நிறைந்த இலாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு பரீட்சையில் வெற்றி கிட்டும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் சுமாராக இருக்கும். பணவருவாயும் ஓரளவு நன்று. குடும்பத்தில் ஒற்றுமையும், நன்மதிப்பும் உண்டு. தேகாரோக்கியம் சில சந்தர்ப்பங்களில் குறைவாக இருக்கும். சிலருக்கு இருப்பிட மாற்றங்கள் ஏற்படலாம். உறவினர்களுடன் இருந்த கசப்புகள் மறையும். குடும்பப் பெண்கள் ஓரளவு திருப்தியாகக் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் சிறிது தாமதமானாலும் கைகூடும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் கைகூடக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன. உத்தியோகத்துறையினர் தமது பணிகளைத் திறமையாகச் செய்து பாராட்டுக்களைப் பெறுவர். சிலருக்கு வசதியான இடமாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு தொழில் நன்றாக நடக்கும். தொழில் சம்பந்தமாக வெளிநாட்டுப் பிரயாணங்கள் கிட்டும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசிக்காரருக்கு செய்தொழிலில் வெற்றி உண்டு. நல்ல வருவாய் ஏற்பட்டாலும். அதற்கேற்ப செலவுகளும் உண்டு. குடும்பத்தில் சிறு சச்சரவுகள் தோன்றி மறையும். உறவினர்களுக்கிடையே விருந்துபசாரங்கள் போன்ற கருமங்கள் ஏற்படுவதால் செலவுகள் அதிகமாகும். தேகாரோக்கியம் பொதுவாக நன்று. பிள்ளைகளால் உதவிகள் உண்டு. திருமணப் பேச்சுக்கள் தள்ளிப்போகும். உத்தியோகத்துறையில் இருக்கும் பெண்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். வேலைப்பழு அதிகமாகும். சக தொழிலாளரின் உதவிகள் கிடையாமற் போகலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக இருப்பினும் கடன்களை வசூலிப்பது சிரமம். மாணவர்கள் கூடிய அக்கறை செலுத்தினால் வெற்றி உண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசிக்காரருக்கு அட்டமத்து வியாழன் சிரமங்களைக் கொடுக்கும். தொழில் கஷ்டமாகவே இருக்கும். பணவருவாயும் குறைவடையும். குடும்பத்தில் ஒற்றுமைக்குறைவு, மனவேதனை, சண்டை சச்சரவுகள் தோன்றும். தேக ஆரோக்கியமும், இடையிடையே பாதிக்கப்படும். இதனால், வைத்தியச் செலவு அதிகமாகும். செலவுகள் வரவுக்கு மிஞ்சிப்போகும். குடும்பப் பெண்கள் சிக்கனமாக நடந்துகொளவது நன்று. திருமணப் பேச்சுக்கள் தள்ளிப்போகும். உத்தியோகத்தினருக்கு வேலைப்பளு, அலைச்சல் கூடுதலாகும். வேலை பார்க்கும் பெண்கள் அதிகாரிகளின் குற்றச்சாட்டுக்கு ஆளாகநேரும். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கல்களில் சிக்கல் ஏற்படும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடை தாமதங்கள் காட்டும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)*



கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு செய் தொழில் விருத்தியடையும். பொருளாதார நிலை மேலோங்கும். குடும்பத்தில் ஒற்றுமை பேணப்படும். இனபந்துக்களின் வருகையால் மகிழ்ச்சியும், குதூகலமும் காணப்படும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்பட இடமுண்டு. தேக ஆரோக்கியம் பாதிப்படையாது. திருமணப் பேச்சுக்கள் கைகூடி மங்கல கருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தினர், மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். நினைத்த வேலை மாற்றங்கள் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் வளர்ச்சியடையும். பணக்கஷ்டங்கள் நிவர்த்தியடையும். புது முதலீடுகள் செய்வதற்கு நன்று. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு. சிலருக்கு மேற்படிப்புகள் வசதி கிட்டும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீன ராசியினர் இந்த வாரம் ஓரளவு நற்பலன்கள் காண்பர். தொழில் முன்னேற்றங்களும், வருவாயும் சிறக்கும். குடும்ப சுகம், ஒற்றுமை சிறப்பாக இருகக்கும். புத்திரர்களால் முன்னேற்றம், செல்வாக்கு உண்டு. நற்காரியக் கொண்டாட்டங்கள் மனநிறைவைக் கொடுக்கும். கொடுக்கல், வாங்கல் பிரச்சினைகள் தராது. எனினும், ஏமாற்றுக்காரரைப் பற்றி அவதானமாக இருக்கவும். அந்நிய தேசத்திலிருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு. இல்வாழ்க்கையில் இணைய விரும்புவோருக்கு காலம் கனியவில்லை. உத்தியோகத்தினருக்கு விரும்பிய பணிமாற்றங்கள் கிடைக்க லாம். இடமாற்றங்களும் ஏற்படக்கூடும். மேலிடத்தில் செல்வாக்கு உயரும். வர்த்தகர்களுக்கு வயாபாரம் நன்றாக நடக்கும். எனினும், பணம் சேருவது குறைவு. மாணவர்கள் கல்வியில் நன்கு வளர்ச்சி காண்பர்.

---

**புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXXVI - சிவா சின்னப்பொடி**

# பிள்ளைகளுக்காக வாழ்கின்ற பண்புள்ள தமிழ்ப்பெற்றோர்

குழந்தைகளுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாதபடி, இந்தப்பணய நாடகத்தை முடிவுக்குக் கொண்டுவரும்படி உள்துறை அமைச்சருக்கு கட்டளையும் பிறப்பித்தார்.

அந்த முன்பள்ளி வளாகத்தை தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிப்பதற்கான சிறப்பு அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு, பதுங்கியிருக்க, மேலதிகாரிகள் கடத்தல்காரருடன் பேரம்பேச, அந்தக் குழந்தைகளை அங்கிருந்த முன்பள்ளி ஆசிரியை தனியான ஒரு வகுப்புக்குள் கூட்டி வைத்து, நடந்தபயங்கரம் அவர்களுக்குத் தெரியாதபடி பாட்டுப் பாடியும், விளையாடியும், நாடகம் ஒன்று பழகுவோம் என்று சொல்லி, தானும் நடித்து, குழந்தைகளையும் நடிக்க வைத்து - நிலைமையைச் சமாளித்துக்கொண்டிருந்தார்.

அதற்குள், பணயக்காரனுடன் காவற்துறை அதிகாரிகள் தொடர்ச்சியாக பேரம்பேசி, குழந்தைகளுக்கான இரவு உணவை உள்ளே பாடசாலைக்குள் அனுப்ப சம்மதிக்க வைத்தனர். ஏற்கனவே, மருத்துவ அதிகாரிகள் 12 மணிநேரம் குழந்தைகள் உறங்குவதற்கான தூக்கமருந்தை அந்த உணவில் கலந்திருந்தனர்.

அந்த ஆசிரியை அந்த உணவைப் பெற்று அந்தக் குழந்தைகளுக்குக் கொடுத்து, குழந்தைகளை உறங்க வைத்தார். அன்று இரவு தொடர்ச்சியாக அந்தப் பணயக்காரனைச் சரணடையும்படி காவற்துறை அதிகாரிகள் பேரம்பேசிக்கொண்டிருந்தனர். அவன் இறங்கி வருவதாக இல்லை.



மறுநாள் காலை குழந்தைகள் எழுந்த போது, ஒன்றுமே நடக்காதது போல அந்த ஆசிரியை - குழந்தைகளை காலைக் கடன் கழிக்க வைத்து ஏற்கனவே வந்திருந்த காலை உணவைக் கொடுத்து அவர்களை பராக்குக் காட்டிக் கொண்டிருந்த நேரத்தில் - அந்த ஆசிரியையும் அவரது உதவியாளரையும் வெளியே செல்லலாம் என்று அந்த பணயக்காரன் உத்தரவிட்டான். தான் இல்லை என்றால் குழநதைகள் பயந்துவிடுவார்கள் அவர்களுக்கு ஆபத்து வந்து விடும் என்பதை உணர்ந்த அந்த ஆசிரியை தான் அங்கிருந்து செல்ல மாட்டேன் என்று உறுதியுடன் கூறிவிட்டார்.

இல்லை நீ வெளியே போயே ஆக வேண்டும். இல்லை என்றால் சுட்டுக்கொன்று விடுவேன்' என்று பணயக்காரன் மிரட்டினான். 'நீ என்னைச் சுட்டாலும் பரவாயில்லை என்னுடைய குழந்தைகளை விட்டுவிட்டு நான் போகமாட்டேன்' என்று பிடிவாதமாகச் சொன்ன அந்த ஆசிரியை தனது உதவியாளரை வெளியில் போகுமாறு சொல்லிவிட்டார்.

அன்று மாலைவரை அந்த ஆசிரியை வெளியில் போய்விடவேண்டும். இல்லை என்றால், கொலை செய்யப்போகிறேன் என்று அந்தப் பணயக்காரன் மிரட்டிக்கொண்டே இருந்தான். இத்தனைக்கும் அந்த ஆசிரியையின் 4 வயது குழந்தையும் - கணவரும்- அந்த பாடசாலை வளாகத்துக்கு வெளியே நின்று அவரது நிலையை அறியத் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் சிறப்பு அதிரடிப்படையினர். - கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் நடவடிக்கையை துரிதப்படுத்தி - உள்ளே நடப்பதை வெளியில் இருந்து அறியும் வண்ணம் ஒரு ஒளிப்பதிவு சாதனத்தைப் பொருத்திவிட்டார்கள்.

அந்திசாயும் நேரம் - அந்த பணயக் காரனுக்கு சற்றுக்களைப்பு ஏற்பட்டு (பணய நாடகம் ஆரம்பித்ததிலிருந்து அவன் சாப்பிடவோ உறங்கவோ இல்லை) ஓரிரு வினாடிகள் கண்சோர ஏற்கனவே அவனது இருப்பை குறிபார்த்து தயார்நிலையில் இருந்த அதிரடிப் படை வீரர் ஒருவர் அவனது நெற்றிப்பொட்டில் அவன் சிந்திப்பதற்கே நேரம் கிடைக்காமல் சுட, மற்றவீரர் பாய்ந்து சென்று அவன் கையில் இருந்த தன்னியங்கி கருவியை கைப்பற்ற அந்தப் பணய நாடகம் ஒரே ஒரு உயிரிழப்புடன் முடிவுக்கு வந்தது.

இந்தச் சம்பவத்தில் - குழந்தைகளுக்காக கடைசிவரை நின்ற அந்த ஆசிரியைக்கு பிரான்ஸ் முழுவதிலுமிருந்து வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் குவிந்தன.

பிரான்ஸ் அரசாங்கம் - அவருக்கு விருது கொடுத்து கௌரவித்தது. இந்த சம்பவத்தை நான் இங்கே குறிப்பிட்டதுக்கு காரணம் - முன்பள்ளிக் குழந்தைகளுக்கும் - ஆசிரிய, ஆசிரியர்களுக்கு இடையிலான உறவின் வலிமை பற்றி உணர்த்துவதற்காகும்.

பிரான்ஸிலும் - மற்றும் சில ஜரோப்பிய நாடுகளிலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் குழந்தைகளை தமிழ்ப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பும் வழக்கம் இருந்தது.

இந்த தமிழ் பள்ளிக்கும் - ஏனைய புலம் பெயர்ந்த நாட்டு முன்பள்ளிக்கும் இடையில்- ஆசிரியருக்கும் - பிள்ளைக்கும் இடையிலான உறவு. கற்பித்தல் முறை தேடலுக்கான பாடத்திட்டம் இல்லாமை என்று பல விடயங்களில் முரண்பாடு இருந்தது.

பெரும்பாலும், தமிழ்ப் பள்ளிகளில் பிள்ளைகள் மீது பாடத்தை வலுக்கட்டாயமாகத் திணிக்கும் ஒரு கல்வி முறையே இருந்தது.

நாலு ஐந்து வயதிலேயே திருக்குறளை பாடமாக்கு, தேவாரத்தைப் பாடமாக்கு, பாடமாக்கிக்கொண்டு வராவிட்டால் எழும்பி கதிரையில் நில், கதிரைக்கு மேல் நில். கையை நீட்டு அடி என்று ஒரு பழைய அணுகுமுறை பின்பற்றப்பட்டது.

பிள்ளைகளுக்கும்,பெற்றோருக்குமான உறவு என்பது வெளிப்படையாகப் பார்த்தால், அனைத்து இன மக்களிடையேயும், ஒரே மாதிரியான தன்மையை கொண்டதாக தோன்றினாலும், ஆழ்ந்து நோக்கினால் அடிப்படையில் பல வேறுபாடுகளைக் காணலாம்.

ஜரோப்பிய சமூகத்தைப் பொறுத்தவரை பிள்ளைகளை வளர்ப்பது - படிப்பிப்பது அவர்களது தேவைகளை நிறைவேற்றுவது, அவர்கள் மீது அன்பு செலுத்துவது இதெல்லாம் பெற்றோருடைய 'கடமை' என்று அவர்கள் நினைக்கின்றார்கள்.

*(தொடரும்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தீப்பால தான் பிறர்கண் செய்யற்க நோய்ப்பால*
*தன்னை அடல்வேண்டா தான்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## மக்களின் எதிர்பார்ப்பு!

அண்மைக்காலமாக யாழ்ப்பாண நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்குகளில் வழங்கிவரும் தண்டனைகள் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்துகின்றன வாக அமைந்திருக்கின்றன.

குடாநாட்டில் குற்றச்செயல்களின் அதிகரிப்பு வேகமாக உயர்ந்து வருகின்றநிலையில் - யாழ்ப்பாண நீதிமன்றங்களின் கடுமையான போக்கு மக்களிடத்தில் நிம்மதிப் பெருமூச்சுக்களைவிட வைத்திருக்கின்றது உண்மை.

13 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய ஒருவருக்கு வழங்கப்பட்ட பத்து வருடச் கடூழியச் சிறை மற்றும் சில மாதங்களுக்கு முன்னரும் பாலியல் வல்லுறவு கொலைக்குற்றங்களுக்காக கடும் தண்டனைகள் வழங்கப்பட்டன. அனைத்துமே இத்தகைய குற்றங்களைச் செய்வோருக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள்தான்.

யாழ்.குடாநாட்டின் ஒழுக்கநிலை என்பது கடந்த சில வருடங்களாக மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது.

இந்த ஒழுக்கச் சீர்கேட்டுக்கான காரணங்கள் என்ன என்பது குறித்தோ, இந்த ஒழுக்கச் சீர்கேட்டைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தோ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுமக்கள் தரப்பில் நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது.

சட்டம், ஒழுங்கைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பிலிருப்பவர்கள் இதையிட்டு அதிகம் கவனம் செலுத்தாமையினாலும் - பல்வேறு தரப்புக்களிலிருந்து கிடைத்து வந்த ஊக்கங்களினாலும் - சமூகத்தைச் சீர்குலைக்கும் சக்திகளின் செயற்பாடுகள் வலுப்பெற்றிருக்கிறது.

அண்மைக்காலத்தில் சமூக ஒழுக்கங்களை முற்றாகச் சீர்குலைக்கும் சக்திகளின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள், கண்டனங்கள் எழுந்தாலும்- இதைக்கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றவர்கள் யார் என்ற கேள்வியும் எழுந்தது.

தமிழ்மக்களின் கலாசார, பண்பாட்டுக்கோலங்களைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் நோக்கத்துடன் ஊக்கப்படுத்தப்பட்ட இத்தகைய சமூகக் குற்றங்கள் மக்களிடத்தில் பெரும் அச்சத்தை உண்டாக்கியிருக்கிறது.

அடுத்த தலைமுறை என்ன நிலைக்குத் தள்ளப்படுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் வலுப்பெற்றிருப்பதை எவருமே நிராகரிக்க முடியாது.

ஒரு சமூகத்தை நேரிடையாக அழிப்பதைவிட - சமூக விரோத செயல்களை ஊக்குவித்து - அத்தகைய சக்திகளை வலுப்பெற வைத்து, இலகுவாக அழித்துவிட முடியும்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு தேசிய இனங்களினதும் இருப்பையே அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகையதொரு கலாசார, சமூக ஆக்கிரமிப்பாகவே குடநாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையையும் ஒப்பிட வேண்டியிருக்கிறது.

எமது சமூகக் கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தி அதில் குளிர்காய எத்தணிக்கும் சக்திகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்தும் இத்தகைய ஒழுக்கச் சீர்கேடுகளுக்கு எதிராக நீதிமன்றங்கள் தமது இறுக்கமான கடமைகளைச் செய்வது ஓரளவுக்காவது நிம்மதியைக் கொடுத்திருக்கின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் குடாநாட்டில் மண்ணெண்ணைத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, நீதிமன்றம் தலையிட்டு - விலைக்கட்டுப்பாடுகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அப்போதைய சூழ்நிலையில் நீதிமன்றத்தில் இந்த நடவடிக்கை மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அது போன்று சமூகக் குற்றங்களுக்கு எதிராக நீதியின் அதிகாரங்கள் வலுவாகப் பயன்படுத்தப்படும் போதும், இதேபோன்ற வரவேற்பைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த சில வருடங்களாக சமூகத்தில் நிலவும் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதில் அக்கறை கொள்ள அதிகாரம் வாய்ந்தவர்கள் முன்வராத சூழலைப் பயன்படுத்தியே இத்தகைய குற்றங்கள் ஊக்கம் பெற்றன.


சமீபகாலத்தில் நீதிமன்றங்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்த ஆரம்பித்ததிலிருந்து, இனிவரும் காலங்களிலாவது சமூக விரோதக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் சற்று அச்சமடைவர் என்பதில் சந்தேகமில்லை.

எதிர்காலத்தில் இத்தகைய குற்றங்கள் முற்றாக ஒழிப்பது என்பதைவிட - கணிசமாகக் கட்டுப்ட்டுத்துவதில் நீதிமன்ற நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கப் போகின்றன.

தொடர்ந்தும் நீதிமன்றங்களின் இத்தகைய வரவேற்பிற்குரிய நடவடிக்கைகளுக்கு சமூக மட்டத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்குமானால், அதுவே சமூக விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பெரிதும உதவுவதாக அமையும்.

நீதியின் கண்களை மறைத்துக்கொண்டு சமூகத்தைச் சீரழிக்க முற்படும் சக்திகளுக்கு நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் சாவு மணியாக அமையும், அமையவேண்டும். அதுவே பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும் என்பதில் சந்தேகமில்லை.

## நாடும் நடப்பும்




# இலங்கை இனப்பிரச்சினை தீர்வில்

# அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் நிர்வாகம் கூடிய ஒத்துழைப்பை வழுங்கி வந்தது

## பிரதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகளின்போது, அமெரிக்க ஜனாதிபதி ஜோரஜ் புஷ்ஷின் நிர்வாகம் கூடிய ஒத்துழைப்பை வழங்கி வந்ததாக அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் இன்டபோல் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள இன்டபோல், இலங்கை அரசியல் நெருக்கடிக்குத் தீவு காண்பதில் ஜோர்ஜ் புஷ் நிர்வாகத்தின் ஒத்துழைப்பை உடனடியாகப் பெறுவதே புத்திசாலித்தனம்.

இதேவேளை, ஜோர்ஜ புஷ நிர்வாகத்தில் உள்ளவர்களும், இலங்கை விவகாரத்தில் அதிகம் கவனம் செலுத்தி வருபவர்களுமான அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல், பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா மற்றும் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜெப்றி லங்ஸ்டட் ஆகியோர் அதிகாரத்தில் இருக்கும்போதே, இலங்கையின் இனநெருக்கடிக்கான அமெரிக்காவின் பங்களிப்பைக் கூடுதலாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் முக்கிய உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி கிளின்டன் நிர்வாகத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சருமாகவும் இருந்த இன்டபோல் தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்காவில் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டாலும், அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றங்கள் ஏதும் ஏற்படாது எனவும், புதிய அமெரிக்க நிர்வாகம் இலங்கை விவகாரத்தைக் கையாளத் தொடங்குவதில் ஏற்படக்கூடிய காலவிரயம் குறித்தும் இலங்கை மக்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

# தமிழ் படைப்பாளிகளுக்கான சிறுகதைப் போட்டிக்கு ஏற்பாடு!

கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், காலம் இதழும் இணைந்து நடத்தும் தமிழ் சிறுகதைப் போட்டிக்கு படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளது.

போட்டிக்கு அனுப்பப்படும் கதை - ஆசிரியரின் சொந்தக் கற்பனையாகவும், இதற்கு முன் பிரசுரிக்கப்படாததாகவும் இருக்கவேண்டும். புதுமுக எழுத்தாளர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம். ஒருவர் ஒரு சிறுகதை மட்டுமே அனுப்பலாம். தேர்ந்தெடுக்கப்படும் மூன்று சிறுகதைகளில் முதலாம் பரிசுபெறும் சிறுகதைக்கு 20 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசுபெறும் சிறுகதைக்கு 13 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசுபெறும் சிறுகதைக்கு 6 ஆயிரத்து 600 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் 2 ஆயிரம் சொற்களுக்கு மேற்படாமல் இருப்பதுடன் கணினியில் அச்சடித்ததாகவும் இருக்கவேண்டும் படைப்புக்கள் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு **Tamil short story contest, 16, Hampstead court, Markham, on, L3 R3 S7, Canada** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

அனுப்பும் சிறுகதையின் எந்தப் பக்கத்திலும் படைப்பாளியின் பெயர் இருக்க்க்கூடாது. கதையுடன் தனியான இணைப்பாக வைக்கப்படும் தாளில் படைப்பாளியின் பெயர், முகவரி, தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் போன்ற விபரங்களும், சிறுகதைச் சொற்களின் எண்ணிக்கையும், ஆசிரியரைப் பற்றிய சிறுகுறிப்பும் இருத்தல் வேண்டும்.

# உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்புகின்றனராம்!

## புனர்வாழ்வு, நல்லிணக்க ஆணையாளர் தெரிவிப்பு

யுத்தம் காரணமாக கடந்த காலங்களில் இடம்பெயர்ந்து உள்நாட்டில் பல்வேறு இடங்களிலும் தங்கியிருந்த மக்கள், தற்போது தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர பெருமளவில் திரும்பிக்கொண்டிருப்பதாக நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க ஆணையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடந்த ஆண்டு மேற்கொண்ட கணிப்பீட்டின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட 6,13,220 பேரில் 3,89,844 பேர் மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

இதன் மூலம் 63 வீதமானவர்கள் சொந்த இடம்திரும்பியுள்ளனர். இவ்வாறு வந்தவர்களில் 20,400 பேர் புதிய இடங்களில் மீள்குடியமர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

சென்ற வருடம் செப்ரெம்பர் மாதம் வரை உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த 32,734 குடும்பங்களுக்கு ரூபா 25,000 மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் விவசாய முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான மீள்குடியேறிய விவசாயிகள் 9,415 பேருக்கு விதைகள், மற்றும் விவசாய கருவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 5000 பேர் நெல் விவசாயிகள் ஆவதுடன் 4415 பேர் பிறஉணவு வகை, மரக்கறி விவசாயிகள் ஆவார்கள், இதன் காரணத்தினால் வடக்கில் நெற்பயிர்ச் செய்கையின் அளவு 35% அதிகரிக்கப்பட்டுள்ளது. கடற்தொழிலுக்கு வழங்கிய உதவியினால் 44,000 மெற்றிக்தொன் பிடிக்கப்படும் மீனின் அளவு 85,000 மெற்றிக் தொன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கல்வி தொடர்பாக 20,000 மாணவர்கள் சென்ற வருடம் வடக்கு கிழக்குப் பாடசாலைக்கு திரும்பி வந்துள்ளனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 50,000 பிள்ளைகளுக்கு அரசாங்கத்துடன் இணைந்து திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதைவிட 55 பாடசாலைகள் முற்றாக புனரமைக்கப்பட்டுள்ளன என ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (தி)

சாதனை வரலாறு... தியாகராஜா இராஜசிங்கம்.



நீச்சல் வீரன் மு.நவரத்தினசாமி பாக்குநீரிணையை நீந்திக் கடந்து இன்று 50 ஆண்டுகள் நிறைவடைகின்றது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

## பாக்கு நீரிணையை முதலில் நீந்திக்கடந்து

# தமிழன் பெருமையை நிலைநாட்டிய சாதனை வீரன் அமரர் நவரத்தினசாமி

**20 ஆம்** நூற்றாண்டில் தமிழின் பெருமையை உலகிலே நிலைநாட்டியவர், நீச்சல் வீரர் நவரத்தினசாமி இவர், தொண்டமனாறு பகுதியிலே பிறந்தவர். 1909 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் நாள் முருகுப்பிள்ளை என்பவரின் மகனாகப் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை தொண்டமனாற்றிலும், மேற்படிப்பினை ஹாட்லிக் கல்லூரியிலும், பயின்றார். மாணவனாக இருந்த போதிலேயே இவர் திறமையுடையவராகக் காணப்பட்டார்.

ஆங்கிலக் கால்வாயை வெள்ளைக்கார வீரர் ஒருவன் நீந்திக் கடந்தான் என்ற செய்தி இவரின் மனதில் ஆழப் பதிந்திருந்தது. தானும் ஒருமுறை பாக்கு நீரிணையைக் கடக்கவேண்டும் என்ற எண்ணம் இவரிடை உதித்தது அதற்காக தன்னுடைய நாளாந்தக் கடமைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் எல்லாம், எதுவித சோம்பலும், சோர்வுமின்றி நீச்சல் பயிற்சிகளை மேற்கொண்டுவந்தார்.

19 ஆவது வயதில் தனது பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு - அரச நிறுவனம் ஒன்றில் தொழில் புரிந்து, அந்த நிறுவனத்தின் போதனாசிரியர் பதவியை அலங்கரித்தார். திருமண வயதில் லீலாவதி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். மூன்று புத்திரர்களை இவர்பெற்று இல்வாழ்க்கையை இன்பமாய் நடத்தி வந்தார்.

முப்பதிரண்டு மைல் நீளமுள்ள பாக்கு நீரிணையை நீந்திக் கடப்பதற்காக 1954 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 16 திகதி முதன்முறையாக ஆழியில் குதித்தார் நவரத்தினசாமி, இலங்கைப் பிரதமரின் பிரதிநிதியாக அப்போது விளங்கிய எம்.பி. நல்லையா அவர் நேரடியாக இவ்விடத்துக்கு வந்து வாழ்த்துச் செய்தியை கொடுத்தார். ஏராளமான மக்களும் இந்நிகழ்விற்காய் வல்வெட்டித்துறையில் ஒன்று கூடினர். பாதுகாப்புக்காக பொலிஸ் பிரிவினரும், வைத்தியப் பிரிவினரும் ஒரு படகில் நவரத்தின சாமியைத் தொடர்ந்து சென்றனர்.


இந்தியாவின் கோடிக் கரையை அடைவதற்கு ஏழு மைல்களே இருந்த வேளையில், இயற்கையின் சீற்றத்தால் பாக்கு நரிணையைக் கடக்க, முடியாமல் கரைசேர்ந்தார்.

தன்னுடைய முதல் முயற்சி கைகூடாமல் போனமையால், சோர்ந்து போய்விடாமல் 1954 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை 4.10 மணிக்கு மீண்டும் தனது சாதனைப் பயணத்தை ஆரம்பித்தார்.

நவரத்தினத்தை வாழ்த்தி அனுப்பவென பருத்தித்துறை நாடாளுமன்றப் பிரதிநிதி ரி.இராமலிங்கம் வந்திருந்தார். பெருமளவிலான மக்களும் வல்வெட்டித்துறைக் கரையில் வந்திருந்தனர்.

நீச்சலை ஆரம்பித்த நேரத்தில் இருந்து, சொற்பநேரமும் இளைப்பாறாமல் தொடர்ந்து சென்றார். தன்னுடைய இலக்கை அடைவதே அவர் குறிக்கோளாக அமைந்தது.

வெள்ளிக்கிழமை இரவு ஏழு மணிக்கு இந்தியாவின் கோடிக்கரை யேறி, கொடியேற்றி வைத்து, தனது சாதனைப் பயணத்தை முடித்துக் கொண்டார் நவரத்தினம்.



சாதனை முயற்சியைத் தொடர்ந்தபோது

பாக்கு நீரிணையைக் கடப்பதற்கு நவரத்தினம் எடுத்த முயற்சிகள் பலவாகும் 18 வருடகாலமாக தன்னை அவர் அர்ப்பணித்துள்ளார்.

அதிகாலைவேளை முட்டைக் கோப்பி பருகிவிட்டு, சுவாச அப்பியாசம் செய்வார். பின்னர், தன்னுடைய வீட்டில் இருந்து கிளிநொச்சிவரைக்குமான 80 மைல் தூரம் சைக்கிளில் பயணம் செய்வார்.

மணற்குவியல் உள்ள இடங்களில், வெறுங்காலால் 10 மைல் தூரம்வரை நடந்து, கடலில் பல மைல்கள் தினமும் நீந்தியும், தேகத்திற்கு விசேடமாக கைகால்களுக் கும் பலத்தை ஊட்டி வந்துள்ளார்.

தினமும் கடல் மேற்படுத்துறங்கும் பயிற்சியும் செய்து வந்துள்ளார். இந்தப் பயிற்சினால் இரண்டாவது முறையாக சாதனை முயற்சியில் ஈடுபட்டவேளையில் நித்திரை இவரை அணுகியது.

நித்திரை அணுகியவேளையில், தான் செய்த பயிற்சியின் மூலம் சிறிது நேரம் கடல் மேல் நித்திரை செய்தார்.

இவ்வாறான பயிற்சிகளின் மூலமாக இவர் பாக்கு நீரிணையை வெற்றிகரமாகக் கடந்து சாதனையைப் படைத்தார். இவரைப் போல் பயிற்சிகளை இடைவிடாது செய்வதன் மூலமே சதானையை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நீச்சலில் மாத்திரமன்றி, கணிதத்திலும், இயந்திரத் தொழிலிலும், நாடக நடிப்பிலும் கவி புனைவதிலும் சிறந்து விளங்கியவர்.

ஹாட்லிக் கல்லூரி சஞ்சிகைகளில் இவரின் கவிதைகளும் இடம்பெற்றன.

பாக்குநீரிணையைக்கடந்து, கோடிக் கரையேறி வீரக்கொடி நாட்டிய செய்தி இலங்கை வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. இலங்கை இந்தியா பத்திரிக்கைகளில் யாவும் முதல் பக்கச் செய்தியாக இச்சாதனை பற்றி எழுதின. அப்போதைய இந்தியப் பரதமர் பண்டிதர் நேரு, இலங்கைப் பிரதமர் சேர் - ஜோன் கொத்தலாவலை முதலிய பிரமுகர்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்தனர். பொது மக்களிடம் இருந்தும் வாழ்த்துச் செய்திகளும், பாராட்டுச் செய்திகளும் நவரத்தினத்துக்கு வந்து சேர்ந்தன.

பாக்கு நீரிணையைக் கடந்ததும் முதலில் வரவேற்பளித்தவர்கள் இந்திய மக்களேயாவார். சாதனையை ஏற்படுத்தி மீண்டும் வல்வெட்டித்துறை வந்ததும் ஏராளமான மக்கள் குழு நவரத்தினத்தை வரவேற்றனர்.

அப்போதைய பருத்தித்துறை நாடாளுமன்றப் பிரதிநிதி, சாவகச்சேரி பிரதிநிதி, தற்காலிக இந்திய உயர்ஸ்தானிகர், சி.எஸ்.பார்குமாரசிங்க, வி.நல்லையா, என்.எம்.பெரோரே முதலியோர் நவரத்தினத்தை வரவேற்க குழுமியிருந்தனர். பாராட்டுக்களை தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நகர மேயர் தங்கப்பதக்கமும், சங்கிலியும் வழங்கிக் கௌரவித்தார். பிரதமர் கொத்தலாவலை வெள்ளிக்கேடயம் ஒன்றைப் பரிசளித்தார். இவை தவிர பல சங்கங்களும், ஸ்தாபனங்களும், வரவேற்றுப் பாராட்டிப் பரிசில் கள் வழங்கினர்.

தனது இறுதிக் காலத்தில் விவசாயம் செய்துவந்தார். தொண்டமனாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பல வருடமாக தலைவராக இருந்து வந்தார். ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் போஷகராகச் செயற்பட்டார்.

தன்னுடைய இரண்டாவது மகனை காரைநகர் துறைமுகத்தில் இருந்து ஊர்காவற்துறை வரை நீந்தி மீண்டும் காரைநகர் வரை நீந்திய சாதனை புரிய வைத்தார்.

மீண்டுமொரு சாதனை முயற்சிக்கான் பயிற்சிகளை செய்து கொண்டிருந்தார் நவரத்தினசாமி. தனி ஒரு ஆளாக கட்டுமரத்தில் தொண்டமனாற்றில் ஆரம்பித்து இலங்கையைச் சுற்றி வந்து, மீண்டும் தொண்டமனாற்றை அடைய வேண்டும் என்ற அந்த முயற்சியை செய்துவந்தவேளை, கடல்த் தாய் மடியில் சென்று சேர்ந்தார்.

30.06.1969 அன்று ஏற்பட்ட இவரின் இழப்பால் தொண்டமானாறு கலங்கியது. தற்போது நவரத்தினசாமி வெற்றிக் கேடயத்துக்கான கட்டுமரம் வலித்தல், நீச்சல் போட்டி முதலான போட்டிகள் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தால் இவர் நினைவாக நடத்தப்படுகின்றன.

1954 ஆம் ஆண்டு இவரின் நினைவாக நாட்டப்பட்ட நினைவுக்கல் இன்றும் இவரின் நினைவை சொல்லிக்கொண்டிருகின்றது. பருத்தித்துறை நடராசா உல்லாசக் கடற்கரையில் இது அமைந்துள்ளது. இவரின் சாதனை முயற்சியை பரம ஹம்சதாசர் கவிதை வரியாக தந்துள்ளார் அதனை இங்கு தருகின்றோம்.

**வெற்றி ஈட்டி விட்டான் - தமிழன்**
**விருது நாட்டிவிட்டான் -உலகு**
**முற்றும் கேட்டிராத - புகழின்**
**முடியிலேறி விட்டான் -அன்பாய்ப்**
**பெற்றதாயின் புகழை - எங்கும்**
**பேசி வைத்து விட்டான் -ஈழம்**
**நற்றவத்தினாலே - ஈன்ற**
**நவரத்தின சாமி.**



சாதனை முடித்து இந்திய கோடிக்கரையை அடைந்தபோது

---

துரோகங்களும் துக்கோற்பத்திகளும்

## காக்கைவன்னியன் முதல் கருணா வரை

(இரண்டாம் பகுதி)

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் 1931 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க சபை தேர்தலை யாழ்ப்பாண இளைஞர் காங்கி ரஸ் பகிஸ்கரித்தது. வடமாகாணத்தில் இந்த அரசாங்கசபை தேர்தல் நடைபெறவில்லை. அடுத்த வேளையில் இந்த பகிஸ்கரிப்பு போராட்டம் நீடிக்கவில்லை. 1934 இல் இடைத் தேர்தல் நடைபெற்றது. 1935 இல் சிங்களத் தலைவரான டி.எஸ.சேனநாயககா தலைமையில், சர்வ சிங்கள மந்திரிசபை அமைக்கப்பட்டது. இந்த சர்வசிங்கள மந்திரிசபை அமைப்ப தற்கான கணித சூத்திரத்தை சிங்களவருக் குக்காட்டிக் கொடுத்தவர். அக்கால கட்டத்தில் இலங்கைப்பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகவிருந்த சுந்தரலிங்கம் என்பவரேயாகும்.

**சோல்பரி அரசியல் அமைப்பு**

இலங்கைக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சி, மேலும் தொடரலாயிற்று. இதன் விளைவாக 1944 ஆம் ஆண்டு இலங்கைக்கு மேலும் அரசியல் சீர்திருத்தம் செய்வதற்காக சோல்பரி தலைமையில் ஒரு குழு அனுப்பப்பட்டது. அவர்கள் செய்த சிபார்சுகள், சிங்களப் பேரினவாத விஸ்தரிப்புக்கு கால்கோள் இடும் என்பதை உணர்ந்துகொண்ட அக்கால தமிழ்த்தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், சோல்பரிப்பிரபு தமிழர்களின் ஆத்மாவைப் புதைக்க வந்துள்ளார். **(Soulbary has come to bary he Soul Of the tamils)** என வர்ணித்தார். அத்தோடு சோல்பரி திட்டத்திற்கு எதிராக அவர் தீவிரமாகப் பிரசாரம் செய்தார். சிறுபான்மை மக்கள் எவரும் இதனை ஏற்றுக்கொள்ளக்கூடாது என, ஜி.ஜி. பொன்னம்பலம் கூறிவிட்டு, இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றவேளை, அப்போது பண்டாரவளைத் தொகுதி உறுப்பினராகவிருந்த இராஜகுலேந்திரன் என்பவரும், மன்னார் தொகுதி உறுப்பினரான தியாகராசா ஜெகநாதன் என்பவரும், டி.எஸ்.சேனநாயக்காவும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் போட்ட சூழ்ச்சித் திட்டத்தில் சிக்கி, தமிழ்மக்களுக்குப் பச்சைத் துரோகம் இழைத்தார்கள். மட்டக்களப்பு கல்குடா தொகுதி பிரதிநிதி வி.நல்லையா பேரினவாதிகளுக்கு உதவினார். அவர் செய்த உதவிகளுக்குப் பிரதியுபகாரமாக பேரினவாதிகள் மந்திரிப் பதவி வழங்கி கௌரவித்தார்கள்.

**தமிழரசுக் கட்சியிலும் துரோகிகள்**

1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி தந்தைசெல்வா தமிழரசுக் கட்சியைத் தொடங்கினார். தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு இணக்கப்பாட்டுத் தீர்வு மூலமே, தீர்வுகாண முடியும் என, மக்கள் மத்தியில் தனது கருத்தை முன்வைத்து, அதற்கான ஆதரவைக் கோரினார். இந்த இலக்கை அடைவதற்கு, இலங்கை நாடாளுமன்றை ஒர பிரச்சார மேடையாக பயன்படுத்த விரும்பி, தந்தை செல்வா நாடாளுமன்றுக்கு வெளியே பல சத்தியாக்கிரகப் போராட்டங்களை முன்னெடுத்தார் இதனால், வடக்கு - கிழக்கில் தமிழரசுக் கட்சி பலம்பெற்று வளர்ந்து, வடக்கையும், கிழக்கையும் தந்தை செல்வா ஒரு குடையின் கீழ் கொண்டுவந்ததோடு, அது தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்ற கருத்து ஆழமாக வேரூன்றி வளரலாயிற்று. இந்த நிலையில், தமிழரசுக் கட்சியில் பலரும் வந்து சேர்ந்தனர். 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மட்டக்களப்பில் வெற்றிபெற்ற பி.க்திர்காமர் என்பவர் பின்னர் யு.என்.பியில் சேர்ந்துகொண்டு துரோகமிழைத்தார். இதேபோல் 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளராக, பொத்துவில் தொகுதியில் வெற்றிபெற்ற எம்.எம்.முஸ்தபாவும், கல்முனைத் தொகுதியில் வெற்றிபெற்ற எம்.எஸ்.காரியப்பரும், பின்னர் கட்சிக்குத் துரோகமிழைத்து பேரினவாதக் கட்சியில் சேர்ந்துகொண்டனர்.

இதேபோல, 1960 ஆம் ஆண்டு ஜுலை மாதப் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டு, வெற்றிபெற்ற எம்.சி.அகமட், 1965 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மூதூர்த் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எம்.ஈ.ஏச்.முகமட்அலி, 1970 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தொகுதியில் கட்சி சார்பில் வெற்றிபெற்ற சி.எக்ஸ்.மாட்டின், 1977 ஆம் ஆண்டு மட்டக்களப்புத் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சி.இராஜதுரை, பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கனகரத்தினம் முதலானேர், ஒவ்வொரு பொதுத்தேர்தலின் பின்னரும் பேரினவாதக் கட்சிகளின் சூழ்ச்சி வலையில் சிக்கி, தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்தனர். ஆனால், மக்கள் அவர்களை மீண்டும் ஒருபோதும் நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யவில்லை. ஒரு உயர்ந்த கொள்ளைக்குப் பின்னால் உறுதியாக நின்றார்கள். இந்த மக்களின் உறுதிதான் தமிழ்த் தலைமைக்கு மிகப் பெரும் பலமாக அமைந்தது.

(நாலடியார்)

(தொடரும்)

# பிரிட்டன் பிரதமர் பிளேயர் லிபியாவிற்கு விஜயம்



பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் ரயில் குண்டுத் தாக்குதலில் மரணமடைந்தவர்களின் அஞ்சலிக் கூட்டங்களில் கலந்துகொண்டபின் நேற்று லிபியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் ரொனி பிளேயரின் லிபியப் பிரயாணத்தை சில அரசியல்வாதிகளும், லொக்கர்ப குண்டுத்தாக்குதலில் இறந்தவர்களின் உறவினர்களும் விமர்சித்திருந்தனர்.

மேலும், பிளேயரின் விஜயம் தொடர்பாக விமர்சித்தவர்களுக்கு அவர் பதிலளிக்கும்போது, பயங்கரவாதத்தைக் கைவிட்டு அணு ஆயுதங்களை அழித்துவிடுவதற்கு முன்வந்துள்ள ஒரு நாட்டுடன் உறவுகளை மீட்டுக்கொள்ளவிரும்புவதில் தவறில்லை எனத் தெரிவித்தார்.

ரொனி பிளேயரின் விஜயத்தை துணிச்சல் மிக்க இராஜதந்திர செயற்பாடென பி.பி.சியின் குட்றோகரி தெரிவித்தார்.

ரொனி பிளேயரின் சந்திப்பின் மூலம் லிபிய இராணுவ உயரதிகாரிகள் பிரிட்டனின் இராணுவப் பாடசாலைகளில் பயிற்சி பெற்றுக்கொள்வதற்கும், சர்வதேச நாடுகளில் லிபியாவிற்கெதிரான தடைகளை பிரிட்டனின் உதவியுடன் நீக்குவதற்கும் வழிவகுத்துள்ளது.

அத்துடன், பிரிட்டன் வர்த்தகர்கள் பலர் லிபியாவுடன் வர்த்தக தொடர்புகளை மேற்கொள்வதற்கான சாத்தியங்களை ஆராய்ந்துவருகின்றனர்.

இதேவேளை, லிபியத்தலைவர் கடாபிக்கும் பிரதமர் ரொனி பிளேயருக்கும் இடையிலான சந்திப்பு தலைநகர் திரிப்போலிக்கு வெளியில் நடத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு லிபியா சுதந்திரமடைந்த பின்னர் விஜயம் செய்யும் முதலாவது பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் சீர்திருத்தங்கள் சூழலை மாசுபடுத்துகின்றன

## ஐ.நா. அறிக்கை தெரிவிப்பு

சீனாவில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்தங்கள் சூழலை மிகவும் பாதித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் தேசிய அறிக்கை தெரிவித்துள்ளது.

அத்துடன், புதிய வகையான வறுமையொன்றையும், மக்களிடையே உருவாக்கியுள்ளது. இந்தப் புதிய திட்டம் வேலையற்ற இடம்பெயர்ந்த மக்களையும் குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், வயது குறைந்தவர்களை அதிகம் பாதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேகமாக வளர்ந்துவரும் தொழிற்சாலை மயமாக்கலினால் ஆறுகள், குளங்கள் ஆகியன அசுத்தமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மக்களின் இடம்பெயர்விற்கான கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளதால், பல மாற்றங்கள் உருவாகியுள்ளன.

உலக நோக்கு

# ஒலிம்பியா நகரில் ஒலிம்பிக் தீபம் நேற்று ஏற்றி வைக்கப்பட்டது

'ஒலிம்பியாவில்' ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் தீபம் ஏற்றும் விழாவில் நேற்று பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்குகொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இத்தொன்மைமிக்க ஒலிம்பியா நகரில் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டிருந்தனர். பாதுகாப்பைத் தீவிரப்படுத்துவதற்கு ஹெலிகொப்டர்கள், உலோகப்பொருட்களைப் கண்டுபிடிக்கும் கருவிகள், மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டன.

ஈட்டி எறிதல் போட்டியில் பதக்கம் பெற்ற 'கோஷ்டா கற்சியோடிஷ்' ஒலிம்பிக் தீபத்தை எடுத்து ஓட்டத்தை ஆரம்பிக்கவிருந்தார்.

உலகில் உள்ள கண்டங்கள் எல்லாவற்றிற்கும் முதன்முறையாக ஒலிம்பிக் தீபம் எடுத்துச் செல்லப்படவுள்ளது. ஒலிம்பியாவில் ஆரம்பிக்கும் இத்தீபம் 7 நாட்கள் கிறீசின் தென்பகுதிக்கூடாக எடுத்துச்செல்லப்பட்டு பனதேனியன் விளையாட்டுத்திடலில் யூன் 4 ஆம் திகதிவரை எரிக்கப்படவுள்ளது.

பின் இத்தீபம் அவுஸ்ரேலியாவிற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது. இத்தீபம் 78 நாட்கள் வரை எடுத்துச்செல்லப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 'கற்சியோடிஷ்' இடமிருந்து தீபம் ரஷ்ய நீச்சல் போட்டி வீரர் அலெக்சாண்டர் ரப்போவிடம் கையளிக்கப்படும். இவர் 1992 ஆம் ஆண்டில் ஒலிம்பிக்கில் இரு தங்கப் பதக்கங்களையும், 1996 ஆம் ஆண்டு இரு பதக்கங்களையும் 2000 ஆம் ஆண்டு ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றிருந்தார்.

ஒலிம்பிக் தீபத்தை சூரிய ஒளி ஆடியொன்றின் மூலம் ஏற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தீபத்தை ஏற்றும் வைபவத்தில் சூரியக் கடவுளான அப்பலோவிற்கு பாதிரியார் ஒருவரினால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# சட்டவிரோத கனியவள அகழ்வு கொங்கோ விபரம் தரவேண்டும்!

## ஐ.நா. சபை கோரிக்கை

கொங்கோவில் கரண்கா மாகாணத்தில் சுரங்கம் ஒன்றிலிருந்து சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்படும் கனியவளம் தொடர்பான தகவல்களை ஐக்கிய நாடுகள் சபை கொங்கோ அரசிடம் கோரியுள்ளது.

இந்தச் சுரங்கத்தில் சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்படும் கனி



யவளம் 'யுரேனியம்' உற்பத்தி செய்வதற்கு முன்னர் உபயோகிக்கப்பட்டுள்ளது.

கொங்கோ அரசு இந்தச் சுரங்கத்தை மூடிவிட்டதாக தெரிவித்தபோதிலும், சட்டவிரோதமாக இந்தச் சுரங்கத்தில் வேலையாட்கள் கடமைபுரிவதாக பி.பி.ஸி யின் செய்தியாளர் தெரிவித்தார்.

6000 வேலையாட்கள் சட்டவிரோதமாக கடமைபுரிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்தச் சுரங்கத்திலிருந்து பெறப்படும் கனி யவளங்களிலிருந்து கோபால்ற, செப்பு, பிளாட்டினம், யுரேனியம் ஆகிய உலோகங்கள் பிரித்தெடுக்கப்படுவதாகவும் செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சுரங்கத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் யுரேனியம் கொங்கோவில் யுரேனியம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகளை நடத்தும் இந்திய, சீன முதலாளிகளுக்கு விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமாக இந்தக் கனியவளம் அயல் நாடான சம்பியாவிற்கூடாக உலக நாடுகளுக்கு விற்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசம் மனித நடமாட்டத்திற்கு தடைசெய்யப்பட்டுள்ளதாக கொங்கோ அரசு அறிவித்தபோதிலும், கடந்த 7 வருடமாக தொடரும் போரினால் இந்தப் பிரதேசத்தின் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளதென கொங்கோ அரசு தெரிவித்தது.

கொங்கோ இந்தச் சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் யுரேனியம் தொடர்பான தகவல்களை தெரிவிக்க வேண்டுமென சர்வதேச அணுசக்தி அமைப்பும் கோரியுள்ளது.

'சிங்கோலோபி' என அழைக்கப்படும் இந்தச் சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட யுரேனியம் 2 ஆவது உலகப் போரில் ஜப்பானில் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்களில் அணுகுண்டுத் தாக்குதல்களுக்கு உபயோகிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி



மண் மகிழ 18.01.1942

மண் நெகிழ 08.04.2003

அமரர்

நாராயணபிள்ளை

## சிவசுப்பிரமணியம்

கடவுளை நாங்கள் காணவில்லை நீங்களே கண்கண்ட தெய்வம்!
நீத்தல் வாழ்வின் முடிவு அல்ல புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்
உங்களுடைய நாங்கள் வாழ்வதால் நீங்கள் இங்கும் வாழ்கிறீர்கள்
இந்த உலகம் உள்ள வரை உங்கள் வாழ்வு தொடரும்
கடவுள் உலகில் வாழச் சென்று இன்றுடன் ஓராண்டு நிறைவு
அங்கும் அமைதி வாழ்வு உங்களது இங்கும், அங்கும் நீக்கமற வாழும்
கடவுளையும் நாம் கண்டு விட்டோம் துதிப்போம்! துதிப்போம்! துதிப்போம்!

உசன்,
மிருசுவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## க.பொ.த. (சா.த) பெறுபேறு

# வேம்படி மகளிர் கல்லூரியில் 13 மாணவிகளுக்கு 10 'ஏ'!

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளில்- யாழ். மாவட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றிருந்தது.

பரீட்சை முடிவுகள் நேற்று மாலை யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 13 மாணவிகள் பத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் மூவர் 10 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவர் ஒருவரும் 10 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியை பெற்றுள்ளார்.

நேற்றுவரை எமக்கு கிடைத்த தகவல்களின்படி சில பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு:

வேம்படி மகளிர் கல்லூரி 10 'ஏ' பெற்ற மாணவிகள் - 13, 9 'ஏ' பெற்ற மாணவிகள் 25, 8 'ஏ' பெற்ற மாணவிகள் 18, 7 'ஏ' பெற்ற மாணவிகள் 20, 6 'ஏ' பெற்ற மாணவிகள் 20.

யாழ். இந்துக் கல்லூரி 10 'ஏ' பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் குஞ்சிதபாதம் சாண்டில்யன், உருத்திரகோடீஸ்வரன் தணேஸ்வரன், சுரேந்திரன் றொசாந்தன். 9 'ஏ' 18 பேர், 8 'ஏ' 30 பேர், 7 'ஏ' 17 பேர், 6 'ஏ' 12 பேர், 5 'ஏ' 15 பேர்.

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி 10 ரங்கநாதன் கோகுல்நாத், 7 'ஏ' ஒருவர்.

யாழ். மத்திய கல்லூரி 8 'ஏ' 2 பேர், 7 'ஏ' 9 பேர், 6 'ஏ' 5 பேர்.

### விரிவுரையாளர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டை கண்டித்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

# பல்கலைக்கழக மாணவர்கள்...

இதனையடுத்து மாணவிகள் பல்கலைக்கழக மாணவ தலைவர் பி. பகீரதனுக்கு இது தொடர்பாக அறிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அறிந்துகொள்ள அவ்விடத்திற்குசென்ற மாணவ தலைவர் பகீரதனும் மற்றும் புவிராஜ் என்ற மாணவனும் அங்கு நின்ற ஈ.பி.டி.பியினரால், கைத்துப்பாக்கிகளாலும் கம்பிகளாலும் கோரமாகத் தாக்கபபட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை - அருகில் பிரசாரப் பணியில் ஈடுபட்ட மாணவர்களும்வந்து நிலைமையைக் கட்டுப்படுத்த முற்பட்டனர். ஆனால் அந்த மாணவர்களும் தாக்குதலுக்குட்பட்டனர். இதன்பின்- கடும் தாக்குதலுக்குட்பட்ட பகீரதனும், புவிராஜூம் சக மாணவர்களால் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஈ.பி.டி.பியினரின் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலானது ஜனநாயக ரீதியில் நடைபெறவுள்ள தேர்தலை குழப்புவதற்கான ஒரு முயற்சியாகும் என, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, மருத்துவபீட மாணவர் ஒன்றியம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் கஜேந்திரன் ஆகியோர் வன்மையாகக் கண்டிப்பதாக தனித்தனியே வெளியிட்ட அறிக்கைகளில் தெரிவித்துள்ளனர்.

# கருணாவுடன் இணைந்துள்ள...

நிதி மோசடிகளும், தன்னிச்சையான படுகொலைக்கும் தலைமைப்பீடத்தினால் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டபோது - விசாரணைக்காக அவர் அழைக்கப்பட்டார்.

தனது குற்றங்கள் நிரூபணமாகி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அஞ்சிய கருணா, தலைமையின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்ததுடன் தலைமையின் மேல் பொய்யான பல பழிகளையும் சுமத்தினார்.

அத்தோடு தான் பிரிந்து விலகப் போவதாகவும் தானே கிழக்கு மாகாணத்தின் தலைவர் என்றும், மீனகவளாகத்துக்கு பொதுமக்கள் சிலரையும் அழைத்து போராளிகள் முன் பிரகடனம் செய்துள்ளார்.

இத்தனை ஆண்டு காலமாக ஆயிரமாயிரம் மாவீரர்களினதும், கரும புலிகளினதும், புனிதமான உதடுகளால் உச்சரிக்கப்பட்டு வந்த உறுதி மொழியை, சத்தியப்பிரமாணத்தை செய்யவிடாது தடுத்துள்ளார்.

எம்மாவீரர்மீது போர்க்கப்படுவதும், உலகத் தமிழர்களால் வணங்கப்படுவதான எம்உயிரிலும் மேலான தேசியக் கொடியை அவமதித்துள்ளார்.

எமது தலைவரின் படங்களை உடைக்கும்படியும், எரிக்கும் படியும் போராளிகளை வற்புறுத்தியுள்ளார். தமிழ்த் தேசியத்தைக் கொச்சைப் படுத்தி, ஊடகங்களுக்கு கருத்து வழங்கினார்.

மட்டு, - அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு படுகொலைகளுக்கும், பாரிய சொத்தழிப்புக்களுக்கும் காரணமாக இருந்த தேசத் துரோகத்துடனும், எதிரிப்படைத் தளபதிகளுடனும் தன் சுயநலத்துக்காக கூட்டு வைத்துள்ளார்.

உண்மை நிலையினைத் தெளிவுபடுத்தும் பத்திரிகைகளை எரித்தும், ஊடகங்களைத் தடைசெய்தும், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களுக்கு உண்மை நிலை தெரியவிடாது தடுத்துவருகிறார்.

நாம் போராளிகளாக இணையும்போது உறுதி எடுத்துக்கொள்ளும் குறிக்கோள் மற்றும் செயற்பாட்டுக் கோவையின்படி இவை அனைத்தும் தண்டனைக்குரிய குற்றங்கள் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். குற்றங்களை ஏற்று மன்னிப்புப் பெறுவதற்கான கால அவகாசத்தை எமது தலைவர் கருணாவுக்கு வழங்கியும், கருணா அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

மட்டக்களப்பு - அம்பாறை மக்களை பிரதேச வாதத்தால் ஏமாற்றி, சுரண்டி தன் உல்லாச வாழ்க்கையையும் சொகுசுகளையும் தொடர்ந்தும் அனுபவிக்கத் திட்டம் கருணா தீட்டி வருகின்றார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்கள் இன்னமும் கருணாவால் சுரண்டப்படுவதை எமது தேசியத் தலைமை அனுமதிக்கப்போவதில்லை.

இன்று உலகத்தின் முன் குற்றவாளியாகவும், துரோகியாகவும் அவமானப்பட்டு நிற்கும் கருணா, தன்னைத் தண்டனையிலிருந்து காப்பதற்காக உங்களை முன்னே நிறுத்தி பலிகொடுக்கத் திட்டமிடுகின்றான். அப்பாவிப் போராளிகள் எவரும் அநியாயமாகப் பலியாகக் கூடாது என்பதே எமது தேசியத் தலைவரின் நோக்கமாகும். உண்மை நிலையை அறியாப் போராளிகளையும், மக்களையும் பயன்படுத்தி எம் விடுதலைப் போராட்டத்தையும், எம் மண்ணையும் துரோகிகளுக்கும் எதிரிகளுக்கும் விற்று விடுவதே கருணாவின் திட்டமாகும்.

நாம் இதுவரை சிந்திய இரத்தத்தையும், புரிந்த தியாகங்களையும் அந்நியருக்கு விற்கின்றார். எம் இனத்தைக் காப்பதற்காக துரோகி கருணாவை எம்மண்ணிலிருந்து களைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கருணாவின் துரோகத்தை போராளிகள் நன்கு விளங்கிக் கொண்டு உடனடியாகக் கருணாவைவிட்டு விலகிவிட வேண்டும். கருணாவின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதை எதிர்க்க முனையும் எவரும், தமிழ்த் தேசியத்தின் துரோகியாகவே கணிக்கப்படுவார்கள்.

அமைப்பில் இணைந்துள்ள அனைவரும் எமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையை ஏற்று இணைந்தவர்கள் என்ற வகையில் தலைவரை நம்பியே பெற்றோர்களும் - பிள்ளைகளைத் தந்துள்ளார்கள் என்ற வகையிலும் உண்மையை அறியாமல் கருணாவின் அருகில் நிற்கும் போராளிகள் நிலைமையைப் புரிந்துகொண்டு கருணாவைவிட்டு விலகி வரவேண்டும். என்று மீண்டும் வேண்டுகின்றோம்.

கருணாவைவிட்டுவிலகி வீடு சென்று குடும்ப உறவுகளுடன் இணைந்து வாழ விரும்புபவர்களுக்கும் எமது தேசியத் தலைவர் பூரண அனுமதி வழங்கியுள்ளார். என்பதையும் அறியத் தருகின்றோம்.

போராளிகளில் எவராவது இனிமேலும் கருணாவின் சார்பாக ஆயுதமேந்தி நின்றால் அதன் விளைவுகளுக்கு போராளியே தனிப்பட்ட பொறுப்பாளியாவார். அவரின் இழப்பும், மாவீரர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

கருணாவும் அவரது அடிவருடிகளும் எதிர்ப்பதற்காக - தமிழீழம் மீட்கப் புறப்பட்ட போராளிகள் அநியாயமாக மடிய வேண்டுமா? கருணாவின் பக்கம் நிற்கும் அணித் தலைவர்கள் பொதுப் பண்புடன் சிந்தித்து வரலாற்றுப் பழியிலிருந்து விலக வேண்டும்.

மட்டக்களப்பு - அம்பாறை மண்ணின் வீர வரலாறு கருணாவால் கறைபடிந்து நிற்கலாகாது. எமது மண்ணின் மாவீரரது அர்ப்பணிப்பும், உழைப்பும் தலை நிமிர்ந்து நிற்கும் வகையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக எனக் கூறப்பட்டுள்ளது.

# பல்கலை மாணவர்களுடன்...

சந்திப் பகுதியில் இவர்கள் தமது பிரசார பணியை மேற்கொண்டிருந்தவேளை அங்குவந்த பொலிஸார் பிரசாரத்திற்குத் தடைவிதித்தனர். இதனையடுத்து அங்கு நின்ற பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் அகிம்சை ரீதியில் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு கூடியிருந்தவர்களைப் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தும், கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும் கலைத்தனர் இதனையடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

இந்தச் சம்பவம் நடந்து கொண்டிருந்தவேளை, சைக்கிளில் தலைக் கவசம் அணிந்து வந்த இனந்தெரியாத ஒருவர் பொலிஸாரின் வாகனம் மீது போத்தல் ஒன்றினால் எறிந்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்து பொலிஸாரால் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட மூவரைப் பொலிஸார் கைது செய்ததாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அவ்விடத்திற்குவந்த யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மூவரையும் தான் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவ்விடத்தில் நின்ற மக்களையும் மாணவர்களையும் அமைதியான முறையில் கலைந்து செல்லுமாறு தெரிவித்தார். இதனையடுத்து அப்பகுதியில் நின்றவர்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை- பொலிஸாரிடம் இதுபற்றிக் கேட்டபோது திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட மாணவர்களிடம் தேர்தல் பரப்புரைக்கான அனுமதிப் பத்திரத்தையும், ஓட்டோவுக்கான சாரதி அனுமதிப் பத்திரத்தையும் கேட்டபோதே இந்த முறுகல் நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரும் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியின் தலையீட்டினால் நேற்றிரவு விடுவிக்கப்பட்டனர். (தீ,91,46,205)

## ஈ.பி.டி.பி...

கைது செய்யப்பட்ட 11 பேரும் நேற்று நண்பகல் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, இவர்கள் தலா 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் - எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## புலிகளின்...

ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு உதவித் தலைவர் கார்லோசுக்கம், மற்றும் தேர்தல் அவதானிப்பாளர் டெல்பின் லென்சி ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர். (01)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் பரநிருபசிங்கம்

(முன்னாள் ஊழியர் கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்)

மூளாயை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பரநிருபசிங்கம் (25.03.2004) இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜெயத்தின் அன்புக் கணவரும், அருள்ராஜன் (தபாலகம், வட்டுக்கோட்டை), சிறிதரன் (பத்திரிகை முகவர், மாவடி), தேவகுமார் (P.T.தேவா), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சாந்தநாயகி (மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை), பரமானந்தவல்லி ஆகியோரின் அன்பு மாமாவும், ஸ்ரீதர்சிகன், ஸ்ரீகௌசிகன், பானுஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தில்லையம்பலம் கமலாம்பாள், திரவியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று காலை (26.03.2004) 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கொத்தத்துறை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி,
வட்டுக்கோட்டை.

(680)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.